பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2048 | கார்த்திகை 05 | செவ்வாய்க்கிழமை 21.11.2017 | கதிர் 16

## சாதாரண தரப் பரீட்சை டிசெம்பர் 12 ஆரம்பம்

கொழும்பு, நவ. 21
2017ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை டிசெம்பர் மாதம் 12ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நடைபெறும் எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பக்கம் 18

❈ ஜனாதிபதி ❈ பிரதமர் ❈ எதிர்க்கட்சித் தலைவர் ❈ நீதி அமைச்சர் ❈ சட்டமா அதிபர் - ஆகியோரை ஒன்றிணைத்து

# கைதிகள் விடயத்தில் ஒரே முடிவு உயர்மட்டத்தில் பேசி எடுப்போம்!

## நாடாளுமன்றத்தில் சம்பந்தன் அழைப்பு



கொழும்பு, நவம்பர் 21
“தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் இறுதித் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக ஜனாதிபதி, பிரதமர், நீதியமைச்சர், எதிர்க் கட்சித் தலைவர், சட்டமா அதிபர் ஆகிய ஐவரை உள்ளடக்கி உயர்மட்டப் பேச்சு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.!” பக்கம் 18

## இடைக்கால அறிக்கை தொடர்பில் கிழக்கு மக்களுக்குத் தெளிவூட்டல்

வெள்ளியன்று ஆரம்பிக்கிறது கூட்டமைப்பு

மட்டக்களப்பு, நவ. 21
புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை தொடர்பாக கிழக்கு மாகாணத்தில் விளக்கக் கூட்டங்களை நடத்தப்போவதாகத் தமிழ்

பக்கம் 18

## வாள்வெட்டைக் கட்டுப்படுத்த அதிரடிப் படையினர் களத்தில்!

மக்கள் தகவல்களை வழங்குவதற்காக அவசர தொலைபேசி இலக்கமும் வரும்

யாழ்ப்பாணம், நவ. 21
யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்கும்,அவற்றுடன்தொடர்

பக்கம் 18

## பட்டப்பகலில் வாளுடன் ஓட்டோவில் பயணித்த 2 இளைஞர்கள் சிக்கினர்



யாழ்ப்பாணம், நவ. 21
யாழ்ப்பாணம் இராச பாதையில் நேற்று முற்பகல் ஓட்டோவில் வாளுடன்பயணித்தஇளைஞர்கள் இருவர் சிறப்பு அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
அச்சுவேலி - பத்தமேனியைச் சேர்ந்த 21, 22 வயதுகளுடைய இளைஞர்களே இவ்

பக்கம் 03

## உடைகிறது ஈ.பி.ஆர்.எல்.எவ்.?

### வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் தமிழரசுக் கட்சிக்குத் தாவுகின்றனர்

யாழ்ப்பாணம், நவ. 21
சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர். எல்.எவ். கட்சியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மூவர் அந்தக் கட்சியில் இருந்து வெளியேறித் தமிழ் அரசுக் கட்சியில் இணைகின்றனர் எனத்

பக்கம் 18

## நெடுந்தீவில் கைதான 11 இந்திய மீனவர்கள் உடனேயே விடுதலை

யாழ்ப்பாணம், நவ. 21
நெடுந்தீவுக் கடற்பரப்பில் நேற்றுக் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் நல்லெண்ண அடிப்படையில்விடுதலை செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பக்கம் 03

## கோப்பாய் கலாசாலை அருகே 4 வெடிகுண்டுகள் கண்டுபிடிப்பு

வன்னியில் இருந்து ஏற்றிவரப்பட்ட மண்ணுடன் வந்ததெனச் சந்தேகம்

யாழ்ப்பாணம், நவ. 21
கோப்பாய் ஆசிரியர் கலா சாலைக்கு அருகில் வெடிக்காத நிலையில் 4 வெடிகுண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.
அவை தொடர்பில் நேற்றுப்பிற்பகல்3மணியளவில் அந்தப் பகுதி கிராம அலுவலரால் பொலிஸாருக்குஅறிவிக்

பக்கம் 18

## இலங்கை அரசுக்கு அமெ. துணை நிற்கும்

கூறுகிறார் துணைத் தூதுவர்



மட்டக்களப்பு, நவ. 21
இலங்கை அரசுடன் அமெரிக்கா தோளோடு தோள் கொடுத்து துணை நிற்கும் என்று இலங்கைக்கான அமெரிக்க துணைத்தூதுவர்ரொபேர்ட்ஹில்டன் தெரிவித்துள்ளார்.

பக்கம் 18

## பிணைமுறி மோசடி விசாரணை நிறைவு

கொழும்பு, நவ. 21
மத்திய வங்கியின் பிணை முறிகள் தொடர்பில்விசாரணைசெய்தல், புலனாய்வு செய்தல் மற்றும் அறிக்கையிடுதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணைகள் நேற்று திங்கட்கிழமையுடன் முடிவடைந்தன.
ஆணைக்குழுவின் இறுதிவிசாரணைஅறிக்கை,

பக்கம் 18


## பள்ளிவாசல் அருகே கடைகள் தீக்கிரை; வவுனியாவில் நேற்றுப் பெரும் பதற்றம்




வவுனியா, நவ. 21
வவுனியா நகரப் பள்ளிவாசலுக்குஅருகில்உள்ள இரு கடைகள் தீயில் முற்றாக எரிந்து நாசமாகின. மேலும் இரு கடைகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இதனால் வவுனியா நகரில் நேற்றுப் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது. (விரிவான செய்தி 2ஆம் பக்கம்)

## பிணைமுறி ஏல விற்பனைக்கு முன்னர் என்னைத் தொடர்புகொண்டார் அர்ஜுன்

ஆணைக்குழு முன்னிலையில் ரணில் சாட்சியம்



கொழும்பு, நவ. 21
கடந்த 2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி மத்திய வங்கியின்பிணைமுறிஏலவிற்பனை நடைபெற்றது. அதற்கு முன்னர் மத்திய வங்கியின் அப்போதைய ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் என்னைத் தொடர்பு

பக்கம் 03

காலைக்கதிர் Kalaikkathir



# வவுனியா பள்ளிவாசலுக்கு அருகில் இருந்த முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் தீக்கிரை!

## கலவரத்தைத் தூண்ட முயற்சி; பொலிஸார் தீவிர விசாரணை










வவுனியா, நவ. 21

வவுனியா நகர பள்ளிவாசலுக்கு அருகில் இருந்த இரு கடைகள் தீயில் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளமையுடன், இரு கடைகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இந்த நிலையில், வவுனியா நகரில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. நேற்று அதிகாலை 1.20 மணியளவில்இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வவுனியா பள்ளிவாசல் பகுதியில் 14 கடைகள் காணப்படுகின்றன. அவற்றில் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக இரு கடைகள் முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளமையுடன், இரு கடைகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன.

இந்த வர்த்தக நிலையம் மீது பெற்றோல் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், விசமிகளின் செயற்பாடே காரணம் எனவும் பள்ளிவாசல் நிர்வாகம் தெரிவித்திருந்தது.

காலை அப்பகுதியில் உள்ள முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டு தமக்கு பாதுகாப்பு வழங்குமாறு கோரி பள்ளிவாசல் முன்பாக ஒன்று கூடினர். இதனால் இந்தப் பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டதுடன் பதற்ற நிலை ஏற்பட்டது.

இதேவேளை, தீ விபத்து குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளைமுன்னெடுத்துள்ள நிலையில் அவர்களது விசாரணைக்கு ஒத்துழைக்கும் வகையில் வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டதற்கு இணங்க நிலைமை வழமைக்குத் திரும்பியது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள்கைது செய்யப்பட வேண்டும் எனவும் அவ்வாறு நடைபெறாத நிலையில் எதிர்வரும் புதன்கிழமை பெரும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் எனவும் அப்பகுதி வர்த்தகர்களும், பள்ளிவாசல் நிர்வாகத்தினரும் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் இந்த வர்த்தக நிலையங்களை அகற்றுமாறு கோரி சிலர் ஆர்ப்பாட்டம் செய்தனர்எனவும்,இனவாதகருத்துக்களை பரப்பி வருகின்றனர் எனவும் பள்ளிவாசல் நிர்வாகம் தெரிவித்ததுடன்அதன்தொடர்ச்சியாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால், நீதியான விசாரணை நடைபெறாவிட்டால் தாம் போராட்டத்தில் ஈடுபட வேண்டி வரும் எனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்த நிலையில், பதற்ற நிலை நிலவிய இடத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், வடமாகாண சபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், அயூப் அஸ்மின், வர்த்தக சங்கத் தலைவர் ரி.கே. இராஜலிங்கம் மற்றும் வர்த்தக சங்க பிரதிநிதிகள் எனப்பலரும் சென்று நிலமைகளை அவதானித்து இருந்தனர்.

வவுனியா வர்த்தக சங்கமும் தமது ஆதரவை வழங்கியிருந்தது.

ஆரம்ப கட்ட விசாரணைகளில் பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடைபெற்றமைக்கான எந்தவித தடயங்களும் கிடைக்காத நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார்விசேடகுழுஅமைத்து தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (க-100)

# சிங்கப்பூர் – இலங்கை இடையே ஜனவரியில் வர்த்தக உடன்படிக்கை!



கொழும்பு, நவ. 21

தேசிய ஏற்றுமதிக்கான மூலோபாயங்களை வகுப்பதற்கு நடவடிக்கை மேற் கொண்டுள்ளது என அபிவிருத்தி மூலோபாய மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரம தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் தமது அமைச்சிற்கான நிதி ஒதுக்கீட்டு வரவுசெலவுத்திட்ட குழுநிலை விவாதத்தின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முற்போக்கு வரவு- செலவுத் திட்டம் இம்முறை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எமது நாடு சர்வதேச ரீதியில் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு தற்போது வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

சமகால நல்லாட்சி அரசு அடிப்படை வசதிகளுக்காக செலவிடுவதிலும் பார்க்க நேரடி வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளது.

எமது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு தனியார் துறையினரின் ஒத்துழைப்பு அவசியமாகும்.

99 சதவீதமான சிறிய வர்த்தக நிறுவனங்களுக்கும் மத்திய வர்த்தகத்துறையினருக்கும் வர்த்தக நடவடிக்கைகளுக்காகச் சிறந்த சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவர்கள் நம்பிக்கை கொள்ளக்கூடியவகையில் தற்பொழுது நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன. ஊக்குவிப்பு நவீனதொழில்நுட்ப சுதந்திர வர்த்தகம் என்பனவற்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். இருதரப்புஉடன்படிக்கை முக்கியமாகும். இதனை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். இந்தியா வேகமாக பொருளாதார ரீதியில் அபிவிருத்தி அடைந்து வருகின்றது.

இதற்காக உடன்படிக்கைகளுக்கான வெற்றிகரமான பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது. ஆடைத்தொடிழிற்துறையை பொறுத்தவரையில் 40 கோடி அமெரிக்க டொலர்களுக்கான வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும். சிங்கப்பூருடன் 2018ஆம் ஆண்டுக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது.

# வவுனியா வர்த்தக நிலையங்கள் தீக்கிரை; உடனடியாக நடவடிக்கை எடுங்கள்!



வவுனியா நகர ஜும்மா பள்ளிவாசலுக்கு சொந்தமான 4 வர்த்தக நிலையங்கள் இனம் தெரியாத நபர்களினால் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபரிடம் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் வலியுறுத்தியுள்ளார்.

பள்ளிவாசலுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்களை அகற்ற வேண்டுமென சிலர் தொடர்ச்சியாக அச்சுறுத்தியதன் பின்னணியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வர்த்தக நிலையங்களை அகற்றுமாறு வலியுறுத்தப்பட்டமை தொடர்பில் ஏற்கனவே வவுனியாபொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மூவினங்கள் வாழும் வவுனியா நகரில், மீண்டும் ஒரு கலவரத்தை தோற்றுவிக்கும் வகையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனால், பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்தி சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, வட பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஷான் பெர்னாண்டோவுடன் நேற்றுக் காலை தொலைபேசியில் கலந்துரை யாடிய அமைச்சர் ரிஷாட் பதியுதீன், இந்தச் சம்பவம் தொடர்பில் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறும் பணிப்புரை விடுத்துள்ளார்.

# பிணைமுறி மோசடி விசாரணை; சுமந்திரனும் நேற்று வாதம்!

கொழும்பு, நவ.21

மத்திய வங்கியின் பிணை முறி விற்பனை மோசடி தொடர்பாக விசாரணை செய்யும் விசேட ஜனாதிபதி ஆணைக் குழு முன்னிலையில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும்நேற்றுமுன்னிலையாகி வாதிட்டார்.

மத்திய வங்கியின் சிரேஷ்ட முகாமையாளரான பதுமநாதன், வங்கியின் சேவையிலிருந்து திடீரென இடைநிறுத்தப்பட்ட விடயத்தை ஒட்டியே சுமந்திரன் தமது ஆட்சேபனையை விசாரணைக்குழு முன் சமர்ப்பித்தார். அவரது வாதத்தின் சில விடயங்களை ஆணைக்குழு ஏற்றுக் கொண்டது.

மத்திய வங்கியின் சிரேஷ்ட முகாமையாளரான பதுமநாதனை, ஆணைக்குழுவின் புலன்விசாரணைகளுக்கு உதவியாக அமர்த்தப்பட்ட சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் விசாரணை செய்திருந்தனர்.

இந்த விசாரணை நடவடிக்கையில் சித்திரவதை, அகௌரவப்படுத்தல், மனிதாபிமானமற்றபோக்குகள் ஆகியன இடம்பெற்றனஎனத்தெரிவித்து, பதுமநாதன் சார்பில் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இந்த மனு தொடர்பில் உயர் நீதிமன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், "புலன்விசாரணை அதிகாரிகளாக நியமிக்கப்பட்டவர், சட்டமா அதிபர் திணைக்கள அலுவலராக ஆணைக்குழு விசாரணையில் சாட்சியங்களை நெறிப்படுத்தவோ, குறுக்குவிசாரணைசெய்யவோ, சட்ட விசாரணையை முன்னெடுக்கவோ முடியாது." - என நீதிமன்றத்தில் வாதிட்டிருந்தார்.

இந்த நிலையில் ஆணைக்குழு விசாரணையிலும், தமது கட்சிக்காரர் சார்பில் தாம் பிரசன்னமாகவிருக்கின்றார் என்றும் -

தமது கட்சிக்காரர் தொடர்பான விசாரணை சமயம் தமக்கு அறிவுறுத்தல் வழங்குமாறும் -

ஆணைக்குழுவுக்கு சுமந்திரன் கடிதம் எழுதியிருந்தார்.

ஆனால், அவரது கட்சிக்காரரான பதுமநாதன் விடயத்தைத் தாங்கள் விசாரணைக்கு எடுக்கவில்லை என ஆணைக்குழு தரப்பில் சுமந்திரனுக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

ஆனால், தமக்கு அறிவிக்காமலேயே கடந்த வியாழக்கிழமை திடீரென பதுமநாதனுக்கு எதிரான சாட்சியங்கள் ஆணைக்குழுமுன்நெறிப்படுத்தப்பட்டன என்றும் -

அடுத்தநாள்அவரைப்பணியிலிருந்து இடைநிறுத்தும் உத்தரவு மத்திய வங்கியினால் வழங்கப்பட்டது என்றும் -

சுமந்திரன்நேற்று ஆணைக் குழுமுன்தெரிவித்தார்.ஆணைக் குழுவின்அந்தநடவடிக்கையை அவர் கடுமையாக ஆட்சேபித்தார்.

என் கட்சிக்காரர் தொடர்பில் விசாரணை நடக்காது என அவரது சட்டத்தரணியான எனக்கு அறிவித்துவிட்டு, இப்படிநீங்கள் அவருக்கு எதிராக ஒரு சாட்சியத்தை நெறிப்படுத்த அனுமதித்தமை தவறு. அந்த சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்ய என்னை அனுமதியுங்கள். அது பொய் சாட்சியம் என்பதை நிரூபிக்கிறேன். என் கட்சிக்காரர் தரப்பு வாதத்தைச் செவிமடுக்காமல் அவர் விடயத்தில் நீங்கள் எந்த முடிவும் எடுப்பது தவறு. அது இயற்கை நீதிக்கு முரணானது."-என்றுசுமந்திரன் முன்வைத்தவாதத்தைஆணையாளர்கள்ஏற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து விசாரணை நடத்துவதற்கு கால அவகாசம் இல்லைஎன்பதால்,சட்டத்தரணி சுமந்திரனின் வாதத்தை ஏற்று, பதுமநாதனுக்கு எதிரான சாட்சியத்தைத் தாங்கள் கவனத்தில் எடுக்காமல் விடுகின்றனர் என்றும் -

பதுமநாதன் சம்பந்தமாகத் தமது இறுதிப் பரிந்துரையில் ஏதும் பிரஸ்தாபிக்கப் போவதில்லை என்றும் -

ஆணைக்குழு நேற்று சுமந்திரனுக்கு உறுதியளித்தது.

இந்த உறுதிமொழியை அடுத்து, அதனைக் குறிப்பிட்டு, பதுமநாதனைஉடனடியாகமீளவும் சேவையில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறுமத்தியவங்கிஆளுநருக்கு சட்டத்தரணி சுமந்திரன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றார் என்று அறிய வந்தது.

# ரயிலுடன் மோதியது கார்; மூவர் பரிதாப உயிரிழப்பு

வெயாங்கொட - ஹிந்தெனிய பிரதேசத்தின் பட்டியகொட ரயில் கடவையில் கார் ஒன்று ரயிலுடன் மோதி விபத்துக் குள்ளானதில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கார் பட்டியகொட ரயில் கடவை ஊடாக வெயாங்கொட பகுதியை நோக்கிச் செல்ல முற்பட்டவேளை எரிபொருள் கொண்டுசெல்லும் ரயிலுடன் மோதியதன் காரணமாக இந்த விபத்து நேர்ந்ததாகப் பொலிஸார் கூறினர்.

விபத்தில் படுகாயமடைந்த நால்வரில் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். காயமடைந்த மூவர் வத்துபிடிவல வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கு இருவர் உயிரிழந்தனர் எனப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

ஓர் ஆணும், இரு பெண்களுமே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை வெயாங்கொட பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# சிறுமியை வன்புணர்ந்தவருக்கு 15 ஆண்டுகள் கடூழியச் சிறை

## யாழ். மேல் நீதிமன்றம் தீர்ப்பு

யாழ்ப்பாணம், நவ.21

சிறுமியை கடத்திச் சென்று வன்புணர்ந்த குடும்பத்தலைவருக்கு 3 குற்றங்களுக்கு 45 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன்.

எதிரி மீதான 3 குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப்பட்டு அவரைக்குற்றவாளியாகமன்று உறுதி செய்கின்றது. ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் 15 ஆண்டுகள் வீதம் கடூழியச் சிறைத் தண்டனைவழங்கப்படுகிறது. 3 வகைச் சிறைத் தண்டனையையும் குற்றவாளி ஏக காலத்தில் அனுபவிக்க முடியும். பாதிக் கப்பட்ட சிறுமிக்கும் அவளது குழந்தைக்குமாக 6 இலட்சம் ரூபா இழப்பீட்டை வழங்கவேண் டும். அதனைச் செலுத்தத் தவறின் ஓர் ஆண்டு சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண் டும். தண்டப் பணமாக 6 ஆயிரம் ரூபாவைச் செலுத்த வேண்டும். தண்டம் செலுத்தத் தவறின் 6 மாதச் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும் என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ் செழியன் தண்டனைத் தீர்ப்பை அறிவித்தார்.

வடமராட்சிப் பகுதியில் 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 வயதுடையசிறுமிவன்புணர்வுக் குட்படுத்தப்பட்டார். அந்தச் சிறுமி ஒரு பிள்ளையின் தாயாரானார்.

இது தொடர்பில் சிறுமியின் வாக்குமூலத்தின் அடிப்படையில் அயல் வீட்டில் வசித்த 6 பிள்ளைகளின் தந்தை (வயது - 42) கைது செய்யப்பட்டார்.

சிறுமியைச் சட்டரீதியான பாதுகாவலர்களிடமிருந்து கடத்திச் சென்று வன்புணர்ந்த குற்றச்சாட்டு உள்ளிட்ட 3 குற்றச்சாட்டுகள் எதிரி மீது சட்டமா அதிபரால் முன்வைக்கப்பட்டு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுவந்த நிலையிலேயே நேற்றுத் தீர்ப்பை வழங்கியதுயாழ்ப்பாணம்மேல் நீதிமன்று.

இளம் தாய் சீர்திருத்தப் பள்ளியிலும் குழந்தை சிறுவர் இல்லத்திலும் உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கை அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் நெறிப்படுத்தினார்.

# வாள்வெட்டுக்களைத் தடுக்க போலிஸ், நீதித் துறைகள் இணைவது அவசியமானது

## சபையில் வலியுறுத்தினார் விஜயகலா

கொழும்பு, நவ. 21

அண்மையில்வடக்கில்வாள் வெட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இதைத் தடுக்க வேண்டுமாயின் பொலிஸ் துறையும், நீதித்துறையும் இணைந்து செயற்படவேண்டும் என இராஜாங்க அமைச்சர் விஜயகலாமகேஸ்வரன்தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்றவிவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கில் பொலிஸார் கடமைகளைச் சரியாகச் செய்யாத காரணத்தினாலேயே நீதித்துறை தனது கடமையைச் செய்ய முடியாமல் போனது.

சட்டம் ஒழுங்கு அமைச்சும், நீதியமைச்சும் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும், அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் விடயத்தில் நீதியமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும். சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்கள் மீதான வன்முறைகளும் நல்லாட்சியில் தொடர்கின்றன. இவற்றை கட்டுப்படுத்த நீதியமைச்சு கவனம் எடுக்கவேண்டும் - என்றார்.

## பட்டப்பகலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாறு கைது செய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டனர்.

சந்தேகநபர்கள் பயணித்த ஓட்டோ மற்றும் அதற்குள்ளிலிருந்து மீட்கப்பட்ட வாள் என்பனவும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த சிறப்பு அதிரடிப் படையினரே சந்தேகநபர்களைக்கைதுசெய்தனர்என்று பொலிஸார் மேலும் கூறினர்.

## நெடுந்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெடுந்தீவுக் கடற் பரப்பில் அத்துமீறி மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச் சாட்டில் நேற்றுக் காலை தமிழகத்தின் நாகை மாவட்டத்தைசேர்ந்தமீனவர்கள் 11 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கடல் சீற்றம் மற்றும் படகு இயந்திரக் கோளாறால் திசை மாறி இலங்கைக் கடல் எல்லைக்குள் வந்ததாகக் கைது செய்யப்பட்டநாகை மீனவர்கள் பதினொரு பேரும் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் காரைநகர் கடற்படைத்தளபதி, இலங்கைக் கடற்படை தளபதி ரணசிங்க விடம் ஆலோசனை செய்த பின்னர் அவர்களின் படகைப் பழுது பார்த்து மீனவர்களை விடுதலை செய்தார்.

பிடிபட்ட படகில் இருந்த மீனவர்கள் அனைவரிடமும் கடிதம் எழுதி கையெழுத்துப் பெற்று பின்னரே அவர்கள் விடுதலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

## பிணைமுறி ஏல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டார்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

மத்திய வங்கியின் பிணை முறிகள் மோசடி தொடர்பில் விசாரணைசெய்யும்ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்றுத் திங்கட்கிழமை முன்னிலையான பிரதமர் அங்கு இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

ஒரு மணித்தியாலத்துக்கு மேலாகப் பிரதமரிடம் சாட்சியம் பெறப்பட்டது.

அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்தவை வருமாறு:

2015.02.02அன்றுகாலை மூன்று தடவைகள் எனக்கு அர்ஜுன் மகேந்திரன் அழைப்பை ஏற்படுத்தியிருந்தார். ஆயினும் என்னால் பதிலளிக்கமுடியவில்லை. பின்னர் அன்றைய தினம் மாலை வேளை மீண்டும் தொடர்பை ஏற்படுத்தினார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டுக்கு ஆயிரத்து 355 கோடி ரூபா நிதித் தேவை காணப் பட்டது. அதனால் முறிகள் ஏல விற்பனைமூலம் ஆயிரம்கோடி ரூபாவைப் பெற்றுக்கொள்ள முடியுமென அர்ஜுன் மகேந்திரனுக்கு கூறினேன்.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் கைவிடப்பட்ட வீதி நிர்மாணப் பணிகள் உள்ளிட்ட பல விடயங்களுக்காக நிதி தேவைப்பட்டது. நிதி நெருக்கடியைச் சமாளிக்கவே முறிகள் ஏல விற்பனையை நடத்த வேண்டிய தேவை ஏற்பட்டது - என்றார்.

இதன்போது அர்ஜுன் அலோசியஸைத் தெரியுமா எனப்பிரதமரிடம்ஆணைக்குழு அதிகாரிகளால் வினவப்பட்டது.

இதற்குப்பதிலளித்தபிரதமர், அவரைத் தெரியும். அர்ஜுன் அலோசியஸின் நிறுவனமானது, பர்பச்சுவல் ட்ரஸரீஸ் மற்றும் பர்பச்சுவல் கபிற்றல் ஹோல்டிங்ஸ்என இருபிரிவுகளை கொண்டுள்ளது. எனினும், பர்பச்சுவல்கபிற்றல்ஹோல்டிங் நிறுவனம் குறித்து எனக்குத் தெரியாது - என்றார்.

பிரதமருக்கு ஏற்கனவே ஜனாதிபதி ஆணைக்குழுவின் சார்பாக 28 கேள்விகளும் சட்டமா அதிபர் திணைக் களத்தால் 20 கேள்விகளும் என மொத்தமாக 48 கேள்விகள் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. இதற்கான பதில்களைக் கடந்த 18ஆம் திகதியே ஆணைக் குழுவுக்குப் பிரதமர் அனுப்பியுள்ளார். இதன் பின்னர் இரண்டாவது வினாக்கொத்து ஆணைக்குழுவால் பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அது தொடர்பில் நேரில் சென்று சாட்சியமளிக்கவுள்ளார் எனப் பிரதமர் அறிவித்திருந்தார். அதன் அடிப்படையில் அவர் நேற்றுநேரில்சாட்சியமளித்தார்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தேசியக் கொடிக்கு மரியாதை...!

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் நாட்டின் தேசியக் கொடியை - சிங்கள கொடியை - ஏற்றுவதற்கு மறுத்தார் என்று கூறப்படும் செய்தி பெரும் பரபரப்பையும் பல்வேறு கருத்து சர்ச்சைகளையும் கிளப்பியுள்ளது.

'சும்மா இருந்த வாய்க்கு அவல் கிடைத்த மாதிரி' இந்த விடயத்தைப் போட்டு மெல்லத் தொடங்கி விட்டன தென்னிலங்கை அரசியல் தரப்புகள்.

தேசியக் கொடி ஏற்றும் போதோ, தேசிய கீதம் பாடும் போதோ எழுந்து நின்று மரியாதை செய்கின்றமை வழமை. அதைச் செய்ய மறுத்தால், அது தேசிய கீதத்தையோ தேசியக் கொடியையோ அவமரியாதைப் படுத்தும் செயல் என அர்த்தம் கூறப்படுவது உண்டு.

ஆனால், தேசியக் கொடியை நான் ஏற்றமாட்டேன் என்று கூறுகின்றமை அதனை அவமரியாதைப்படுத்தும் - அல்லது அகௌரவப்படுத்தும் - விடயமாக அர்த்தப்படுத்தப்படக் கூடியதா என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்றே.

எங்கள் நாட்டில், ஒரு நிகழ்வில் பிறிதொரு நாட்டின் தேசியக் கொடி ஏற்றப்படும்போதோ, தேசிய கீதம் இசைக்கப்படும் போதோ நாமும் எழுந்து நின்று அதற்கு மரியாதை செய்கின்றமை வழமை தான்.

இப்போது - இதுவரையும் கூட - இலங்கைத் தமிழர்கள் இலங்கையின் தேசியக் கொடி ஏற்றப்படும் போதும், தேசியக் கீதம் இசைக்கப்படும் போதும் எழுந்து நிற்கின்றார்கள்; மரியாதை கொடுக்கின்றார்கள்.

ஆனால், அவர்களில் பலர் இது எனது நாட்டுக் கொடி, இது எனது தேசிய கீதம் என்ற உணர்வு நினைவுடன் அதனைச் செய்யவில்லை என்பதே உண்மை. அடுத்த நாட்டுத் தேசியக் கொடி ஏற்றப்படுவதாகவோ, அடுத்த நாட்டு தேசிய கீதம் இசைக்கப்படுவதாகவோ மனதில் கருதிக்கொண்டுதான் அவர்கள் எழுந்து நிற்கின்றார்கள் என்பதே உண்மை.

இலங்கைத் தேசியக் கொடிக்காகவோ அல்லது தேசிய கீதத்துக்காகவோ தாங்கள் எழுந்து நிற்கின்றமையை தங்கள் மனதில் இப்படியான காரணத்தைக் கூறித்தான் அவர்கள் சமாதானம் செய்து கொள்கின்றார்கள்.

இப்படி நம்மில் பலர் கருதுகின்றமை சரியென்றோ அல்லது அது தப்பென்றோ இங்கு ஆராய்வது நமக்கு முக்கியமல்ல.

ஆனால், தென்னிலங்கை பௌத்த, சிங்களத்தின் ஆட்சி அதிகாரம் எம்மீது வல்வந்தமாகத் திணிக்கப்பட்டிருப்பதாக உணரும் சாதாரண - சராசரி - தமிழனுக்கு இது எனது நாடு, இது எனது நாட்டுத் தேசியக் கொடி, இது எனது தேசத்து தேசிய கீதம் என்ற உணர்வு வர மாட்டாது என்பதே உண்மை.

அந்த உண்மையின் உரைகல்தான் வடக்கு மாகாண கல்வி அமைச்சரின் பிரதிபலிப்பு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் ஐயா கூட, சிங்கக் கொடியை மேடையில் தூக்கிப் பிடித்து அசைத்துவிட்டு, நாட்டின் தேசியக் கொடியைத் தூக்கி அசைத்தேன் என்று கூறவில்லை. எனது காளி ஆச்சியின் சிங்க (வாகனக்) கொடியைத் தான் நான் தூக்கி அசைத்தேன் என உணர்கிறேன்." - என்றுதான் கூறினார்.

இதையேதான் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனும் மிக விளக்கமாக - மிக விவரமாக - எடுத்துரைத்திருக்கின்றார்.

இலங்கையின் உயர்நீதிமன்ற நீதியரசராக இருந்த அவர், இலங்கையின் சுதந்திர தின நிகழ்வு எதிலும் தாம் பங்குபற்றவில்லை என்றும், அதற்கு இத்தகைய உணர்வே காரணம் என்றும் பட்டவர்த்தனமாகப் போட்டுடைத்திருக்கின்றார்.

'இந்த நாடு எங்களுடையது' என்ற உணர்வை இந்த நாட்டின் சுதேசிகளான தமிழர்கள் மத்தியில் ஏற்படுத்தாமல் - அல்லது ஏற்படுத்தவிடாமல் - தென்னிலங்கைப் பேரினவாதிகள் முழுமூச்சாக - மேலாதிக்க மமதையோடு - செயற்பட்டு வரும் போது, அந்த மனநிலை தமிழ் மக்களுக்கு வரப்போவதில்லை என்பது திண்ணம்.

இந்தத் தீவின் மற்றொரு தேசிய இனத்தால் - சிங்கள தேசத்தால் - தமிழ்த் தேசமாகிய நாம் ஆக்கிரமிக்கப்பட்டு, அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டிருக்கின்றோம் என்ற மன நிலையிலேயே நாம் வாழ்கின்றோம்.

இந்தச் சூழலில் ஐக்கிய இலங்கை என்ற விடயம் தமிழ் மக்கள் மத்தியில் வாய்ப் பேச்சில்தான் வருகின்றது. அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை.

வடக்கிலும் சிங்கக் கொடியேற்றி, தேசிய கீதத்துக்குத் தனித்துவமாகத் தமிழ் மக்கள் மரியாதை செய்யும் நிலை ஏற்பட வேண்டுமானால், அதற்கான உணர்வு நிலை மாற்றம் தெற்கிலிருந்துதான் முதலில் ஆரம்பிக்கப்பட வேண்டும். அப்படி அங்கு மாற்றம் நேருமானால், சங்கிலித் தொடர் விளைவாக அதன் பிரதிபலிப்பை வடக்கிலும் காணக்கூடியதாக இருக்கும்.

தமிழ் மக்களும் சிங்கக் கொடியையும், தேசிய கீதத்தையும் மதிக்க வேண்டுமானால் அதற்குரிய அரசியல், அதிகார மாற்றம் இங்கு ஏற்பட்டால்தான் அது சாத்தியமாகும்.

அந்த மனமாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய அரசியல் சீர்திருத்தங்களுக்குத் தென்னிலங்கை தயாரா?

இல்லையேல் மனமாற்றம் வராது. சட்ட அழுத்தத்தால் செயல் மாற்றத்தை மட்டுமே காணமுடியும்.

தேசியக் கொடிக்கும், கீதத்துக்கும் மரியாதை சட்ட அழுத்தத்தால் மட்டும் வருவதாக இருந்து பயனில்லை. அது உணர்வோடு ஒன்றி வந்தால்தான் மரியாதை. இல்லையேல் அந்த மரியாதை 'ஒப்புக்குச் சப்பாணி'தான்'!

# மத்திய மாகாண கல்வி அமைச்சு தொடர்ந்தும் இ.தொ.கா. வசமே!





கொழும்பு, நவ. 21

எதிர்வரும் மத்திய மாகாண சபை தேர்தலின் பின்னரும் தொடர்ந்து மத்திய மாகாண தமிழ்கல்வி அமைச்சு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வசமே இருக்கும் என மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர் மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஹட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட சென்ன் தமிழ் மகா வித்தியாலயத்திற்கான புதிய கட்டடத் திறப்பு விழாவும், வருடாந்த பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

பாடசாலையின் அதிபர் எ.ரொபர்ட் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசியல் ரீதியான விடயங்களுக்கு அதிபர்களையும், ஆசிரியர்களையும் கல்வித் திணைக்கள அதிகாரிகளையும் பயன்படுத்துகின்றோம் என சிலர் கூறித் திரிகின்றனர்.

நான் இரண்டு வருடங்களாக மத்திய மாகாண அமைச்சராகவும், ஆறு மாத காலமாக தமிழ் கல்வி அமைச்சராகவும் இருக்கின்றேன், இதுவரை காலமும் அவ்வாறு யாரையும் தேவைக்காகப்பயன்படுத்தியதுகிடையாது.

நான் கல்வித்துறை சார்ந்தோரை சந்திக்கும் போதும் அத்துறைக்கு ஒருவரை நியமிக்கும் போதும் அவர்களிடம் தெரிவிப்பது கல்வித்துறையில் எமது சமூகத்தை உயர்த்த பாடுபடுங்கள் என்றே.

அதேபோலபாடசாலைகளுக்கு எவர் உதவி செய்தாலும் அதனை பெற்றுக்கொள்ளுமாறே தெரிவித்துள்ளேன், சிலர் மத்திய மாகாண அமைச்சரின் தலையீட்டால் பாடசாலைகளுக்கு அபிவிருத்தியை செய்ய முடியாதுள்ளது எனப் பொய்ப் பிரசாரம் செய்கின்றார்கள்.

இது அவர்களின் கையாலாகாத்தனம் என்றே கூறுவேன், பாடசாலை அபிவிருத்தியில் அக்கறையுள்ள யாரும் உதவி செய்யலாம் என்பதை பகிரங்கமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது சிலர் கல்வி அமைச்சில் அரசியல் சார்பாக செயற்படுகின்றனர் எனவும், பாடசாலைகளில் பெறுபேறுகள் குறைந்து காணப்படுகின்றன எனவும், 25 வருடமாக ஒரே பாடசாலையில் அதிபர்கள் இடமாற்றம் பெறாமல் கடமையாற்றுகின்றனர் எனவும் தெரிவிக்கின்றனர்.

அவ்வாறாயின் கடந்த காலங்களில் இந்த விடயங்கள் தொடர்பில் குரல் கொடுக்காதது ஏன்?

குறைகூறும் அரசியலை விட்டு விட்டு எமது சமூகத்திற்கு சேவை செய்ய வேண்டும் என்பதே எனதும், எனது தலைவன் ஆறுமுகம் தொண்டமானினதும் விருப்பமாகும்.

எமது சமூகம் ஏனைய சமூகத்தோடு சரி சமமாக வாழ கல்வியிலே வளர்ச்சியடைய வேண்டும், அதற்காக கல்விச் சமூகம் நிறைந்திருக்கும் இந்த அரங்கில் சிறந்த கல்வியை கற்ற சமூகத்தை உருவாக்க பாடுபடுங்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அனர்த்தங்களைத் தடுக்கும் வகையில் முல்லைத்தீவில் வேலைத் திட்டங்கள்!




கொழும்பு, நவ. 21

முல்லைத்தீவு மாவட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஊடாக நான்கு வேலைத்திட்டங்கள் 2கோடி40ட்சம் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அனர்த்தங்களைத் தடுக்கம் வகையில் அமைச்சின் ஊடாக பல்வேறு வேலைத் திட்டங்கள் முன் னெடுக்கப்பட்டுள்ளன.

கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 89 இலட்சத்து 80ஆயிரம் ரூபா செலவிலும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 88 லட்சத்து 70 ஆயிரம் ரூபா செலவில் இரண்டு வேலைத் திட்டங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், மாந்தை கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவில் 6.15 மில்லியன் ரூபா செலவில் ஒரு வேலைத் திட்டமும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நாளை

22.11.2017
புதன்கிழமை

நட்சத்திரம் : பூராடம் பி.இ. 05.48 வரை
திதி : சதுர்த்தி பி.இ. 01.03 வரை

சுபநேரம் : 04.40 – 06.10 வரை
இராகுகாலம்: 12.10 – 01.40 வரை

# இலங்கையில் நீரிழிவு நோயால் 20 லட்சத்துக்கு மேற்பட்டோர் பாதிப்பு!

கொழும்பு, நவ. 21

சர்வதேச நீரிழிவு நோய் தடுப்பு தினத்தை முன்னிட்டு சுகாதார அமைச்சின் தொற்றா நோய்ப் பிரிவு ஒரு மாத காலத்திற்கு பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த உள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கு அமைவாக இவை முன்னெடுக்கப்படுகின்றமை சிறுநீரக நோய் மற்றும் அபாயகர நோய் தொடர்பான விசேட வைத்தியர் மனில்க சுமணசிறி தெரிவித்துள்ளார்.

நாட்டில் நீரிழிவு நோயால் 20 லட்சத்துக்கும் மேற்பட்டோர்பாதிக்கப்பட்டுள்ளனர்.

அடையாளம்காணப்படாத நீரிழிவு நோய் மற்றும் முழுமையாக நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இதிலும் பார்க்க அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் பொது மக்களுக்குத் தெளிவு படுத்தப்பட வேண்டும். எதிர்வரும் சில தினங்களில் இதற்கான சிகிச்சை மற்றும் ஆலோசனை சேவைகளும் நடத்தப்பட உள்ளனர் என விசேட வைத்தியர் மனில்க சுமணசிறி குறிப்பிட்டார்.




இதேவேளை, கண் ஆஸ்பத்திரியில் விசேட சிகிச்சைகள் தற்போது இடம்பெறுகின்றன. கண் வைத்தியர்கள் மற்றும் தொற்றா நோய் பிரிவின் விசேட வைத்தியர்கள் இதில் கலந்துகொண்டனர்.

கொழும்பு நகரம் மற்றும் அதனை அடுத்துள்ள அரச மற்றும் தனியார்துறை சாரதிகளின் கண்கள் இங்கு பரிசோதனை செய்யப்படுகின்றன. நீரிழிவு நோய் காரணமாக கண்ணில் பல்வேறு கோளாறுகள் ஏற்படும். இந்த நிலையைக் கொண்ட பெரும்பாலான சாரதிகள் அடையாளம்காணப்பட்டுள்ளனர். இவர்களுக்குச் சிகிச்சைகளும் வழங்கப்படுகின்றன எனவும் தற்போது சுமார் 800 பேர் இந்த சிகிச்சையை பெற்றுள்ளனர் எனவும் தேசிய கண் வைத்தியசாலையின் விசேட வைத்தியர் பினர அமரதுங்க தெரிவித்துள்ளார்.



## மாணவர்களுக்கு புலமைப்பரிசில்!

கொழும்பு, நவ. 21

2017ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஹோமாகம பனாகொடை இராணுவ கனிஷ்ட பாடசாலையைச் சேர்ந்த 34 மாணவர்களுக்கு பணப் பரிசு வழங்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சின் சேவா வனிதா பிரிவால் ஏற்பாடு செய்யப்பட இந்த நிகழ்வு பாதுகாப்பு அமைச்சில் அண்மையில் இடம் பெற்றது.

சேவா வனிதா பிரிவின் தலைவி திருமதி ஷாலினி வைத்தியரத்னவால் ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான பணத் தொகை பாடசாலையின் ஆசிரியர் பிரதிநிதி டபிள்யூபி .ரஞ்சித் குமாரவிடம் வழங்கப்பட்டது.

# பெற்றோல் தட்டுப்பாடு வதந்தியை பரப்புவோர் மீது கடும் நடவடிக்கை

கொழும்பு, நவ. 21

வதந்தியின் காரணமாக பொதுமக்கள் மத்தியில் மீண்டும் பெற்றோல் தொடர்பில் தேவையற்ற பீதி ஏற்பட்டுள்ளது என கனியவள அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-.

இந்த வதந்தியில் எந்தவித உண்மையும் இல்லை. காரணம், எம்மிடம் தேவையான எரிபொருள் கைவசம் உண்டு.

பொதுமக்களுக்கு தேவையான எரிபொருள்உள்ளிட்டஎரிபொருள் களை விநியோகிக்க தயாராகவுள்ளோம்.

கொலன்னாவையில் எரிபொருளைவிநியோகிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். தேவைக்கேற்ற வகையில் எரிபொருள் கொண்ட கப்பல் உரிய நேரத்தில் வரவுள்ளது.

இது தொடர்பில் பொது மக்கள் குழப்பமடையத்தேவையில்லை.





தற்போது சிலர் கான்களை எடுத்துக் கொண்டு எரிபொருள் நிலையங்களுக்கு செல்கின்றனர் எமக்கு தகவல் கிடைத்துள்ளது.

எரிபொருளை விற்பனை செய்வது அங்கீகாரம் கொண்ட விற்பனையாளர்களுக்கு மட்டுமே உண்டு அதிகாரமற்ற விற்பனையாளர்களிடம் எரிபொருளை பெற்றுக் கொள்ளவேண்டாம்.

இவ்வாறு எரிபொருளை கொள்வனவு செய்யும் போது ஏதாவது சம்பவம் ஏற்பட்டால் கூட்டுத்தாபனம் என்ற ரீதியில் எமக்கு எந்த விதமான பொறுப்பும் இல்லை. தேவையான எரிபொருள் இருப்பதால் இவ்வாறு எரிபொருளை கொள்வனவு செய்யவேண்டிய தேவை யில்லை .

எரிபொருள் உரியவகையில் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. இதனால் இம்முறை வதந்தியைப் பரப்புவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு வதந்தியைப் பரப்புவது சட்டவிதிகளுக்கு முரணானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பிரதமர் ஆணைக்குழு முன் ஆஜரானமை தலைமைத்துவத்திற்கு சிறந்த லட்சணம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொறுப்புமிக்க தலைவராக எப்போதும் செயற்பட்டு வருகின்றார் என்று அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

பிணைமுறி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சாட்சியமளித்தமை இதற்கு சிறந்த உதாரணமாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இந்த விடயங்களைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முன்னைய ஆட்சிக்காலத்தில் நாட்டில் உயர்நிலை பதவியை வகித்த பிரதம நீதியரசர் திருமதி சிராணி பண்டாரநாயக்க பூச்சி புழுவைப்போன்று தூக்கி எறியப்பட்டார். தமது அழுத்தங்களுக்கு உட்படாமையினாலேயே அவரை இவ்வாறு நடத்தினர்.

இது போன்றுதான் முன்னைய ஆட்சிக்காலத்தில் நாட்டில் களவு ஊழல் மோசடி என்பன அதிகரித்திருந்தன. தாம்நினைத்தவாறு செயற்படுவதற்கு சிலருக்கு அதிகாரம் இருந்தது.

தவறுவிழைவிப்போரைக் கைது செய்வதற்கு அதிகாரம் எவருக்கும் அன்று இருக்க வில்லை.



கபீர் ஹாசிம் கூறுகிறார்

நாம் இன்று இந்த நிலையை மாற்றியமைத்துள்ளோம். இந்த மாற்றத்தையே நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றனர். எமது அமைச்சர்கள் பலர் இன்று ஆணைக் குழுவிற்குச் சென்று சாட்டியமளித்துள்ளனர். என்னையும் வருமாறு அழைத்தனர். நாம் சென்று சாட்சியமளித்தோம்.

இந்த அழைப்பை கௌரவித்துநாம் செயற்பட்டோம். எமது பொறுப்பை நிறைவேற்றுவோம். நாம் ஆணைக்குழுவிற்கு சென்றதால் நாம் தவறுகள் விளைவித்தவர்கள் என்பது அர்த்தமில்லை.

நான் தவறு விளைவிக்கவில்லை. அதனால் பயப்படவில்லை. எங்கள் பிரதமர் சுயமாகவே தெரிவித்திருந்தார். தம்மிடம் சாட்சி பெற வேண்டுமாயின் எந்தச் சந்தர்ப்பத்திலும் சாட்சியமளிப்பதற்குத் தயார்.

எந்த நாட்டிலாவது அரசியல்வாதி ஒருவர் இவ்வாறு பொறுப்புடன் செயற்பட்டுள்ளாரா? என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தகவல் அறியும் சட்டம் தொடர்பான ஆணைக்குழுவில் 438 முறைப்பாடுகள்!

கொழும்பு, நவ. 21

இந்த ஆண்டின் தகவல் அறியும் சட்டம் தொடர்பான ஆணைக் குழுவிற்கு 438 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என ஆணைக்குழு அறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த ஆணைக்குழு தனது அறிக்கையை கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் 218 முறைப்பாடுகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா எனவும் 220 முறைப்பாடுகளை மட்டுமே விசாரணைக்கு உட்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# குரங்குகளால் மாணவர்கள் பாதிப்பு!

மட்டக்களப்பு, நவ. 21

ஓட்டமாவடி - கோறளைப் பற்று மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் குரங்குகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளன என பொதுமக்கள் தெரிவித்துள் ளனர்.

இதனால், பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிக் கப்படுகின்றனர். குரங்குகளின் விளையாட்டால் மாணவர்கள் பாதிக்கப்பட்ட சம்பவங்களும் உள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காவத்தமுனை, மீராவோடை போன்ற கிராமங்களில் இந்தக் குரங்குகளின் தொல்லை நாள்களுக்கு நாள் அதிகரித்துள்ளன எனக் குறிப்பிடப்படுகிறது.

குரங்குகள் கூட்டம் கூட்டமாக நுழைத்து பொது மக்களின் வீடு, தோட்டங்கள் மற்றும் சொத்துக்களுக் கும் பெரிய சேதத்தை ஏற்படுத்தி வருகின்றன என அந்தப் பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனால், அங்குள்ள பாடசாலையில் கல்வி நட வடிக்கையில் ஈடுபடும் மாணவர்களின் கற்றல், கற் பித்தல் நடவடிக்கைகளுக்கும் அசௌகரியங்களை இந்தக் குரங்குகள் ஏற்படுத்துகின்றன எனவும் தக வல்கள் தெரிவிக்கின்றன.

குரங்குகள் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டு மரங்களிலும், பாடசாலை கூரைகளிலும் பாய்ந்து விளையாடியதன் காரணமாக முன்பு மீராவோடை





அல்-ஹிதாயா மகா வித்தியாலயத்தில் பாடசாலை யின் ஓடுகள் மாணவர்களின் மேல் விழுந்துள்ளன.

இதனால், இரண்டு மாணவர்கள் பலத்த காயங் களுடனும் ஏனைய நான்கு மாணவர்கள் சாதாரண உட்காயங்களுடனும் வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டு சிகிச்சை பெற்றும் வந்துள்ளனர்.

குரங்குகளால் ஏற்படும் தொல்லைகள் குறிந்து பிரதேசசெயலக அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் பல தடவைகள் வலியுறுத்தப்பட்டும் இதுவரை எவ் வித நடவடிக்கைகளும் மட்டக்களப்பு வன ஜீவராசி கள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படவில்லை என பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இருப்பினும் இந்த நிலைமையை கட்டுப்பாட்டின்



கீழ் கொண்டுவருவதற்கான முயற்சிகளை ஓட்டமாவடி பிரதேச செயலகமும், பிரதேச சபையும் இணைந்து மேற் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## குப்பைகள் அகற்றுவதில் காரைதீவில் சிக்கல் நிலை!

### புதிய நடைமுறை அறிவிப்பு





மட்டக்களப்பு, நவ. 21

காரைதீவில் குப்பை கள்அகற்றுவதில்சிக்கல் நிலை தோன்றியுள்ள தால் மக்களுக்குப் புதிய முறையை காரைதீவுப் பிரதேச சபை அறிமுகம் செய்துள்ளது.

காரைதீவில் சேகரிக் கப்படும் குப்பைகள் யாவும் அட்டாளைச் சேனை பிரிவிலுள்ள பள்ளக்காடு பகுதியில் கொட்டப்பட்டுவரு கின்றன.

தற்போது அந்தப் பகுதி நிரம்பியுள்ளதால், குறித்த பகுதிக்கு அருகி லுள்ள மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இத னால் குப்பைகள் கொட் டுவதில் சிரமம் ஏற்படும் என்று பிரதேசபை அறி வித்துள்ளது.

இதனால், காரைதீவுப் பிரதேசசபை பொதுமக் களுக்குப் பகிரங்க அறி வித்தல் வழங்கி புதிதாக பச்சை மற்றும் சிவப்பு நிற உரப்பைகளை 100 ரூபாவுக்கு வழங்கியுள் ளது.

அதில் உக்கும் பொருள் கள் உக்காத பொருள்கள் என இருவகைப்படுத்தி பொது மக்கள் குப்பை களைதரம் பிரித்து வைக்க வேண்டும்.

அதனை காரைதீவி லுள்ள குப்பைகள் கொட் டும் இடத்தில் உக்கும் குப்பைகளை பசளை தயாரிக்க ஏற்பாடு செய்ய வுள்ளது. உக்காத குப்பை களை பள்ளக்காட்டுக் குக் கொண்டுசெல்வது எனதீர்மானிக்கப்பட்டுள் ளது.

இது தொடர்பில் காரை தீவுப் பிரதேசசபை செய லாளர் எஸ்.நாகராஜா தெரிவிக்கையில்-

தேசிய நிகழ்ச்சித் திட்டத்திற்கமைவாக குப்பைகளைத்தரம்பிரிக் கும் செயற்றிட்டத்தின் கீழ் புதிய நிற பைகளை பொதுமக்களுக்குவழங்கி யுள்ளோம்.

புதியமுறையில்குப்பை களைச் சேகரிக்கையில் முன்னரைவிடக்குறைந்த குப்பைகளே கிடைத்து வருகின்றன என்று குறிப் பிட்டுள்ளார்.

## சுயநிர்ணய உரிமையை இழக்கக்கூடிய தீர்வை கூட்டமைப்பு ஒருபோதுமே ஏற்றுக்கொள்ளாது!

### நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் தெரிவிப்பு





மட்டக்களப்பு, நவ. 21

தமிழ்மக்களின்அபிலாஷைகளைத் தீர்க்கமுடியாத, அரை குறையான, சுயநிர்ணய உரிமையை இழக்க கூடிய எந்த தீர்வையும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது என மட்டக் களப்பு மாவட்ட தமிழ்த்தேசியக்கூட் டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித் தியடைந்த மாணவர்கள் மற்றும் சிறப்பாக சேவையாற்றிய ஆசி ரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

இந்தநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஒரு சமூகம் பாதிக்கப் படுவதை இந்த நாட்டை நேசிக்கும் மக்க ளால் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த நாடு பல்லின சமூகங் களைக் கொண்டது. இந்த நாட்டில் மூன்று இனங்கள் தேசிய இனங் களாக வாழ்கின்றன.

இந்த நாடு வளம்பெற வேண்டு மாக இருந்தால் சிறுபான்மை, பெரும்பான்மை என்ற பேதமில் லாமல் சகல மக்களும் சமத்துவமாக மதிக்கப்பட வேண்டும்.

எண்ணிக்கையில் அதிகமாக வுள்ளோம் என்பதற்காக எண் ணிக்கையில் குறைவாக இருப்ப வர்களை அடிமைப் படுத்துகின்ற எண்ணங்கள் இந்த நாட்டில் இருக் கக்கூடாது.

சிறுபான்மையாக வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் கண்ணீர்சிந்து வதும், துன்புறுத்தப்படுவதும் இந்த நாட்டிற்கு ஆரோக்கியமான எதிர்காலத்தை ஏற்படுத்தித் தராது.

காலி மாவட்டத்தில் சிறு பான்மை முஸ்லிம்களுக்காக பெரும்பான்மையினத்தவர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள வன்முறை யென்பது கண்டிக்கத்தக்கது.

இந்த நாட்டை நேசிக்கின்ற எவரும் இவ்வாறான வன்முறை களை ஏற்றுக் கொள்ள முடியாது. இவ்வாறான செயற்பாடுகள் எங் கும் இடம்பெறக்கூடாது.

நல்லாட்சியென்பது நல்ல ஆட்சி யாக இருக்குமானால் இவ்வாறான வன்முறைகள் தவிர்க்கப்பட்டு எதிர்காலத்தில் சகல மக்களும் மகிழ்ச்சியாகவும், சமத்துவமாகவும் வாழக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும்.

இடைக்கால அறிக்கையென் னும் விடயம் ஒரு முடிவான அறிக் கையில்லை. அந்த அறிக்கையில் பல விதமான திருத்தங்கள், மாற் றங்கள் செய்யப்பட்டு அது தமிழ் மக்களால் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்திலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை ஏற்றுக்கொள்ளும்.

இந்த அரசு அதனைநிறைவேற்ற முடியாது என்ற நிலையேற்பட்டால் உள்நாட்டில்இந்தப்பிரச்சினையைத் தீர்க்கமுடியாது, வெளிநாடுகளுக்கு கொண்டுசெல்லப்படக்கூடிய ஒரு சூழ்நிலையுள்ளது.

மேலும், தமிழ் மக்களின் அபி லாஷைகளைத் தீர்க்க முடியாத, அரைகுறையான, சுயநிர்ணய உரி மையை இழக்கக் கூடிய எந்த தீர் வினையும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு ஏற்றுக்கொள்ளாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிரான்குளம் சீமூன் விடுதியில் புதுக்குடியிருப்பு கதிரவன் சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் தலை வர் ரி.இன்பராஜா தலைமையில் நடைபெற்றநிகழ்வில்மண்முனைப் பற்று கோட்டக்கல்வி அதிகாரி கே.நல்லதம்பி, காந்திசேவா சங்கத் தின்தலைவர்ஏ.செல்வேந்திரன் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

# 11 ஆயிரம் புலிகளை விடுவித்தமை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்




கொழும்பு, நவ. 21

முன்னைய அரசு எடுத்த சில தவறான முடிவுகள் தேசிய பாதுகாப்புக்கு மோசமான அச்சுறுத்தல் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் தலைமையகங்களை பத்தரமுல்லவில் ஒரே இடத்துக்கு மாற்ற முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த முடிவும் அத்தகைய ஒன்று தான். அது பாராட்டப்படக் கூடிய ஒன்று அல்ல.

இராணுவத் தலைமையகத்துக்கு சொந்தமான காணி சங்கிரி-லா விடுதிக்கு விற்கப்பட்டது. தற்போதைய இடத்தை விட்டு நாங்கள் விரைவில் வெளியேற வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

11 ஆயிரம் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளை விடுதலை செய்த மஹிந்த ராஜபக்ஷவின் முடிவும் பாராட்டத்தக்கதல்ல.

கட்டுநாயக்க விமான நிலையம், இராணுவ முகாம்களைத் தாக்கியவர்களும் கூட, எந்த விசாரணைளுமின்றி விடுவிக்கப்பட்டனர். இந்த முடிவுகள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளன.

ரஷ்யாவிடம் இருந்து போர்க் கப்பலைக் கொள்வனவு செய்வதற்கு இன்னமும் முடிவு எடுக்கப்படவில்லை. இந்த விடயம் அமைச்சரவையில் உள்ளது, அதுபற்றி அமைச்சரவை விரைவில் முடிவு செய்யும்.

டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னதாக, எமது முடிவு ரஷ்யாவுக்குத் தெரியப்படுத்தப்படும். அதற்குப் பின்னரே கப்பலைக் கட்டும் பணி ஆரம்பிக்கப்படும். கப்பலைக் கட்டுவதற்கு மூன்று ஆண்டுகள் தேவைப்படும். அது புதிதாக இருக்க வேண்டும்.

முதலில் ரஷ்யா வழங்க முன்வந்த போர்க்கப்பலை நாங்கள் நிராகரித்து விட்டோம். அது ஆழ்கடல் ரோந்துக்கப்பல். அதுபோன்ற கப்பல்கள் பல எம்மிடம் உள்ளன.

ஆஸ்திரேலிய கடல் வரை செயற்படக் கூடிய வகையிலான ஆழ்கடலில் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடிய போர்க் கப்பல்களே எமக்குத் தேவை.

அமெரிக்காவும் எமக்கு இன்னொரு போர்க்கப்பலை வழங்கவுள்ளது. எமது கடல் பகுதியைப் பாதுகாப்பதற்கு, இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளும் கூட எமக்கு இராணுவ கப்பல்களை வழங்கியுள்ளன.

இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமரின் வழிநடத்தலில் நாம், ஐ.நா அமைதிப் படைக்கு 200 படையினரை அனுப்ப முடிந்துள்ளது. அடுத்த ஆண்டு மேலும் 600 படையினரை அனுப்பும் வாய்ப்பு எமக்குக் கிடைக்கும்.

இரணைமடு இராணுவ முகாம் மூடப்படவில்லை. நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான விடுதி மாத்திரம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## பரீட்சைத் திணைக்களம் கண்காணிப்பு நடவடிக்கை

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சைக்காக நாடளாவிய ரீதியில் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக அதிகாரிகளை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பரீட்சை ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சைக்காக இம்முறை விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு பரீட்சைத்திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பரீட்சை மத்திய நிலையங்களில் முறைகேடுகள் இடம்பெறுவதற்கு அனுமதியளிக்கப் போவதில்லை என்று பரீட்சை ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

பரீட்சை மேற்பார்வையாளர்களின் வசதி கருதி, இம்முறை பரீட்சை நடைபெறும் வகுப்புகளில் 20 மாணவர்களுக்கு மாத்திரமே இட ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும்.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை எதிர்வரும் டிசெம்பர் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதுடன், எதிர்வரும் 21 ஆம் திகதி வரை பரீட்சை நடைபெறவுள்ளது. இம்முறை பரீட்சையில் 6 லட்சத்து 88 ஆயிரத்து 573 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளமை குறிப் பிடத்தக்கது.

### கோரிக்கைகள் பல முன்வைத்து

## 18 தொழிற்சங்கங்கள் நாளை வேலை நிறுத்தம்!

கொழும்பு, நவ. 21

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் அரசு அவற்றுக்கு செவிசாய்க்காதமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சுகாதார சேவை உட்பட 18 தொழிற்சங்கங்களின் ஊழியர்கள் நாளை நாடுதழுவிய வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என அறிவித்துள்ளனர்.

இந்த வேலைநிறுத்தப் போராட்டம் நாளை காலை 7 மணி முதல் நாளை மறுதினம் காலை 7 மணி வரை முன்னெடுக்கப்படவுள்ளது என கூட்டுத் தொழிற்சங்கங்களின் ஏற்பாட்டாளர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

(க)

## கொழும்பு ஊடகவியலாளருக்கு ஞானசார தேரர் அச்சுறுத்தல்!



கொழும்பு, நவ. 21

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றின் ஊடகவியலாளருக்கு பொதுபல சேனாவின் பொதுச் செயலர் வண.கலகொடஅத்தே ஞானசார தேரர் அச்சுறுத்தல் விடுத்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நாரம்மலவில், பௌத்த பிக்கு ஒருவரின் தாயாரின் இறுதிச்சடங்குக்குச் சென்றிருந்த ஞானசார தேரர், அங்கு ஐலன்ட் நாளிதழின் ஊடகவியலாளர் சந்திரபிரேமவுடன் வாக்குவாதம் செய்துள்ளார்.

நீயா சந்திர பிரேம? உன்னை அறைந்து விடுவேன். நீ எழுதிய புத்தகத்தைப் பற்றி எனக்குத் தெரியும். என்று ஞானசார தேரர், அந்த ஊடகவியலாளரை எச்சரித்துள்ளார்.

இதன்போது கடும் வாக்குவாதமும் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

பின்னர், ஊடகவியலாளர் சந்திரபிரேமவை ஏனைய பிக்குகள் அந்த இடத்தில் இருந்து வெளியே அழைத்துச் சென்று நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தனது 30 ஆண்டு ஊடக வரலாற்றில் இதுபோன்ற அச்சுறுத்தலை எதிர்கொள்ளவில்லை என்று சந்திரபிரேம தெரிவித்துள்ளார்.

'கோத்தாவின் போர்' என்ற தலைப்பில், சந்திரபிரேம முன்னர் நூல் ஒன்றை எழுதி வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

# தெற்காசிய பிராந்திய புலனாய்வு மையம் உருவாக்குவதற்கான கூட்டம் கொழும்பில்!



தெற்காசிய பிராந்திய புலனாய்வு ஒருங்கிணைப்பு மையத்தை உருவாக்குவதற்கான மிக முக்கியமான உயர் மட்டக் கூட்டம் நாளை மறுதினம் 23 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் இந்தக் கூட்டம், கொழும்பில் உள்ள சினமன் கார்டன் விடுதியில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இலங்கையின் சட்டம் ஒழுங்கு அமைச்சும், போதைப் பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பாக ஐ.நா. பணியகத்தின், தெற்காசியப் பிராந்திய பணியகமும், இணைந்து இந்தக் கூட்டத்துக்கு ஒழுங்கு செய்துள்ளன.

குற்றவியல் புலனாய்வு மற்றும், நாடுகடந்த குற்றங்கள் தொடர்பாக, தெற்காசியப் பிராந்திய நாடுகளுக்கிடையில் புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் வகையிலான, தெற்காசியப் பிராந்திய புலனாய்வு ஒருங்கிணைப்பு மையத்தை உருவாக்கும் நோக்கிலேயே இந்தக் கூட்டத்துக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பிராந்தியத்தில் நாடு கடந்த குற்றங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான, பிராந்திய நிலையத்தை அமைக்க வேண்டும் என்ற ஐ.நாவின் வலியுறுத்தலின் பேரில் இந்தக் கூட்டம் நடத்தப்படுகிறது.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் உள்ளிட்ட பிராந்திய நாடுகளின், உள் நாட்டு விவகார அமைச்சுக் களின் செயலர்கள் உள்ளிட்ட மூத்த அதிகாரிகள் 40 பேர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சர்வதேச நடனத் திருவிழா; யாழ்.நகரில் ஆரம்ப நிகழ்வு

## டிசெ.01இல் வீரசிங்கம் மண்டபத்தில்

யாழ்ப்பாணம், நவ.21

'நற்றன்டா' அமைப்பால் நடனம் மூலம் பல்வேறு சமூகங்களை ஒன்றிணைக்கும் நோக்கோடு 'நற்றன்டா சர்வதேச நடனத் திருவிழா' (NATANDA INTERNATIONAL DANCE FESTIVAL) கடந்த மூன்றாண்டுகளாக இலங்கையில் டிசெம்பர் மாதத்தில் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இலங்கை உட்பட சர்வதேச நாடுகளின் நடனக் கலைஞர்கள் பலர் பங்குகொள்ளும் இவ்விழா கடந்த 2015 ஆம் ஆண்டில் கொழும்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டு மிகவும் சிறப்பாக இடம் பெற்றது.

இதன் தொடர்ச்சியாக கடந்த ஆண்டில் இவ்விழாவின் ஆரம்ப வைபவம் கண்டியிலும் நிறைவு நிகழ்வு கொழும்பிலும் இடம்பெற்றன. இதற்கமைவாக இவ்வாண்டு இவ்விழாவின் ஆரம்ப வைபவம் யாழ்ப்பாணத்திலும் நிறைவு விழா கொழும்பிலும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் - வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ள இவ்விழாவின் ஆரம்ப வைபவத்தில் இந்தியா, இந்தோனேசியா, ரஷ்யா, லண்டன், சுவிற்ஸர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த புகழ்பெற்ற நடனக்கலைஞர்கள் பங்குபற்றி நடன நிகழ்வுகளை வழங்கவுள்ளனர்.

இவ்விழா யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதற்கு இணை ஏற்பாட்டாளராக உள்ள திருமறைக் கலாமன்றத்தின் நடனக்கலைஞர்களும் மட்டக்களப்பு, கொழும்பு, அநுராதபுரம் உட்பட இலங்கையின் பல்வேறு நடனக் குழுவினரும் நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். (இ)

## தினசரி ராசி பலன் 21.11.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் கார்த்திகைத் திங்கள் 6 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை திருதியைத் திதி இரவு 12.12 மணிவரை. பின்னர் சதுர்த்தி. நட்சத்திரம் மூலம் பி.இ.3.50 மணிவரை. பின்னர் பூராடம். அமிர்தசித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - மாலை 2.50 மணிமுதல் 4.17 மணிவரை.

**சுபநேரம்** - பகல் 10.34 மணிமுதல் 12.13 மணிவரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி**- கார்த்திகை மாத வளர்பிறை திருதியை.

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** மூலம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** நன்மையான நாள். பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். அரசியலில் இருப்பவர்களுக்கு புதிய பதவிகள் வந்து சேரும். பிரிந்த உறவுகள் ஒன்று சேருவர்.

**ரிஷபம்:** தீமையான நாள். பணத் தட்டுப்பாடு அதிகரிக்கும். கருத்து வேறுபாடுகள் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு சக உத்தியோகத்தர்களுடன் பகைமை உண்டாகும்.

**மிதுனம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. பொருள்வரவு சுமாராக இருக்கும். பெண்கள் ஆடம்பரச் செலவுகளைக் குறைக்க வேண்டும். வியாபாரம் ஏற்றமும் இறக்கமுமாகக் காணப்படும்.

**கடகம்:** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் அன்னியோன்னியம் அதிகரிக்கும். வீடு, வாகன யோகம் உண்டாகும். வெளிநாடு செல்ல ஆயத்தமாவார்கள்.

**சிம்மம்:** உயர்வான நாள். வருமானம் உயரும். உத்தியோகத்தர்களின் திறமையால் முன்னேற்றம் உண்டாகும். சிலருக்கு புதிய தொழில் வாய்ப்புகள் அமையும்.

**கன்னி:** யோசனையான நாள். பொருளாதாரம் நலிவடையும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் உண்டாகும். வியாபாரத்தில் மந்த நிலை காணப்படும். உறவினர்களால் செலவுகள் உண்டாகும்.

**துலாம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் தாமதம் ஏற்படும். உடலில் ரோகங்கள் உண்டாகும்.

**விருச்சிகம்:** இன்பமான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் இனிமை கொலுவிருக்கும் வியாபாரம் அபரிமிதமான வளர்ச்சி அடையும். சிலர் குடும்பத்துடன் சுற்றுலா செல்வார்கள்.

**தனுசு:** மகிழ்ச்சியான நாள். பொருளாதாரம் வளர்ச்சி அடையும். குடும்பத்தில் உட்பூசல்கள் காணப்படும். பெண்கள் விரும்பியபடி மண வாழ்வு அமையும். உத்தியோகத்தர்களுக்கு வேலைச் சுமை அதிகரிக்கும்.

**மகரம்:** கவலையான நாள். பணப்பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் நிம்மதி குறைவாகக் காணப்படும். அதிக அலைச்சல் உடல் அசதியைத் தரும். வேலைச் சுமை அதிகரிக்கும்.

**கும்பம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். அநாவசியச் செலவுகளால் கடன்பட நேரிடும். குடும்ப அமைதி பேணப்படும். உறவினர் வீட்டுச் சுகச்செலவுகள் உண்டாகும்.

**மீனம்:** விருத்தியான நாள். பொருளாதாரம் சுமாராக இருக்கும். குடும்ப உறவில் புரிந்துணர்வு அதிகரிக்கும். வியாபாரம் விருத்தி அடையும். உத்தியோகத்தில் மேன்மை உண்டாகும்.

சந்திராட்டமநாள்: கார்த்திகை 2 ஆம், 3 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருசீரிடம் 1 ஆம், 2 ஆம் பாதங்கள் ஆகிய நட்சத்திரங்களில் தோன்றியோர் இன்று சுபகருமங்கள் ஆரம்பிக்கின்றமையைத் தவிர்க்கவும்.

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை; குருநகர், யாழ். நகர் பகுதிகளில்!

## வியாழன், வெள்ளி களத்தரிசிப்பு

யாழ்ப்பாணம்,நவ.21

டெங்கு ஒழிப்பு நடவடிக்கையாக நாளை மறுதினம் வியாழக்கிழமையும் மறு நாள் வெள்ளிக்கிழமையும் குருநகர் மற்றும் யாழ். நகரில் குறிப்பிட்ட கிராம அலுவலர் பிரிவுகளிலும் - டெங்கு களத்தரிசிப்பு இடம்பெறவுள்ளது.

நாளைமறுதினம்(வியாழன்)- குருநகர் II ஜே/67, ஜே/68, ஜே/75 ஆகிய பிரிவுகளிலும்-

வெள்ளிக்கிழமை- பஸார் II ஜே/73, ஜே/77, ஜே/78 ஆகிய பிரிவுகளிலும்-

இந்தக் களத்தரிசிப்பு இடம் பெறும். அன்றைய தினங்களில் தங்கள் வீடுகளில் தரித்திருந்து களத்தரிசிப்புக்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்-

டெங்கு நுளம்பு பெருகக் கூடிய சூழலை அகற்றி டெங்குத் தாக்கத்திலிருந்து எம்மைப் பாதுகாக்கும் முகமாகத் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். இதன் மூலமே அதிகரித்து வரும் டெங்கு நோய்த் தாக்கத்திலிருந்து விடுபட முடியும். இந்தத் தேசிய நிகழ்வு, அதன் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் அமைந்திட சகலரும் ஒத்துழைப்புகள் வழங்கி தங்கள் தங்கள் வாழிடங்கள், சமய நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுச் சந்தைகள், மயானங்களின் சுற்றுச்சூழலை துப்புரவாகப் பேணி வாருங்கள்.

இம்முறை டெங்கு பெருக்கத்துக்குச் சாதகமான நிலைமைகள் காணப்படும் அனைத்து அரச தனியார் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள், வீடுகள், மண்டபங்கள், ஆலயங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். எனவே அனைவரும் தங்கள் சூழலை டெங்கு பெருகாதவாறு சுத்தமாக வைத்திருக்குமாறு அறிவுறுத்துகின்றோம்.- என்றுள்ளது. (இ)

# விரைவில் நீதிமன்றத்தை நாடுவோம் என்கிறார் ஆறுமுகன் தொண்டமான்!

கொழும்பு, நவ. 21

நுவரெலியாமாவட்டத்தின் ஹட்டன் மற்றும் தலவாக்கலை நகரசபைகளில் ஏற்பட்டுள்ள அநீதிக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நீதிமன்றத்தை நாடவுள்ளது என கட்சியின் பொது செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

45 வருடங்களாக ஹட்டன் நகரசபை பகுதியில் இருந்த வாக்காளர்களில் பலர் தற்போது பிரதேச சபைக்குள் உள்வாங்கப் பட்டுள்ளமையின் உண்மை நிலை தெரியவில்லை எனக் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர், இது தொடர்பில் அறிய சட்ட உதவியை நாடவுள்ளோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நுவரெலியா மாவட்டம் - ஹட்டன் கல்வி வலயம் செனன் தமிழ் மகா வித்தியாலயத்தின் கட்டட திறப்பு விழாவும் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இலங்கை தொழிலாளர் காங்கிரஸின்



பொது செயலாளர் ஆறுமுகன் தொண்டமான் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

நுவரெலியா மாவட்டத்தில் மேலதிகமாக பிரதேச சபைகள் உருவாக்கப்படுகின்றமைக்கு வித்திட்டது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்.

இந்த விடயம் தொடர்பில் 1998ஆம் ஆண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகர் சௌமியமூர்த்தி தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர் சீ.பீ.ரத்நாயக்க, அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க ஆகியோர் முன்வைத்த கோரிக்கைக்கு மறைந்த அமைச்சர் ரேணுகா ஹேரத் எதிர்ப்பை வெளியிட்டார்.

எனினும், தற்போது, இந்த விடயத்திற்குப் பலர் உரிமை கோருகின்றனர் என்றும் அவர் சாடியுள்ளார்.

## மின் தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், நவ.21

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை -

**யாழ் பிரதேசத்தில்**- மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, கொடுக்குழாய், ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில், வெற்றிலைக்கேணி இராணுவ முகாம், கட்டைக்காடு இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும்-

**வவுனியா பிரதேசத்தில்**- அட்டம்பஸ்கட கிராமம், தவசிக்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் எம்.துவாரகன் அறிவித்துள்ளார்.



# தமிழகத்தில் வாழும் ஈழ அகதிகளின் கதி தான் என்ன?

## மறக்கப்பட்ட நிலையில் அந்த மக்கள்

அண்மைய மாதங்களில் ஊடகங்களில் இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள ரோஹிங்யா அகதிகள் தொடர்பான செய்திகள் முதன்மை இடத்தைப் பிடித்துள்ளன. ஆனால், இந்தியாவில் கிட்டத்தட்ட 35 ஆண்டுகளாக அகதி வாழ்வு வாழும் ஈழத்தமிழ் மக்கள் தொடர்பாக ஊடகங்கள் முக்கியத்துவம் காண்பிக்கவில்லை.

பரிதாபகரமான வாழ்விடங்கள், சுதந்திரமாக நடமாடுவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடைகள், வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புக்கள் குறைவாக உள்ளமை போன்றன இந்தியாவின் தமிழ்நாட்டில் 1983 தொடக்கம் வாழும் ஒரு லட்சம் வரையான ஈழத்தமிழ் மக்கள் சந்திக்கும் பிரச்சினைகளாகும்.

இவை தவிர, சிறிலங்காவின் மத்திய மலைநாட்டை பூர்வீகமாகக் கொண்ட மக்களுக்கு குடியுரிமை வழங்கப்படாமை பெரியதொரு பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்து வாழும் ஈழத்தமிழ் அகதிகள் சமூக மற்றும் உளவியல் பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதால் இவர்களில் பலர் தற்கொலை செய்துள்ளமையுடன், பலர் பாடசாலைக் கல்வியைத் தொடரமுடியாத நிலையிலும் இன்னும் பலர் சிறுவயதுத் திருமணத்தில் ஈடுபடுகின்றனர் எனவும் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த அகதிகள் பலர் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தை நினைத்து கவலையுடன் காணப்படுகின்றனர் என்றும் தமிழ்நாட்டு அகதி முகாம்களில் வாழும் ஈழத்தமிழ் அகதிகளில் 40 சதவீதமானவர்கள் 18 வயதிற்குக் குறைவானவர்களாக உள்ளனர் என்றும் அறிக்கைகள் உறுதிப்படுத்துகின்றன.

இவர்களில் 28 ஆயிரத்து 500 பேர் வரை நாடற்றவர்கள் எனும் நிலையில் வாழ்கின்றனர். ஈழத்தமிழ் அகதிகள் சிறிலங்காவிற்குத் திரும்பும் நடவடிக்கையை இலகுபடுத்துவதற்கான சட்டத் திருத்தத்தை சிறிலங்கா அரசு 2003 மற்றும் 2009 இல் மேற்கொண்டது.

இதேபோன்று இரு நாட்டு தமிழ் அரசியற் கட்சிகள் கூட ஈழத்தமிழ் அகதிகள் அவர்களது சொந்த நாடான சிறிலங்காவிற்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்பதில் விருப்பம் காண்பிக்கின்றன. ஏனெனில் இதன் மூலம் சிறிலங்காவின் வடக்கு மாகாணத்திற்கான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மேலும் பலப்படும் என தமிழ் அரசியற் கட்சிகள் கருதுகின்றன.



சிறிலங்காவில் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னரும் கூட தமது சொந்த நாட்டிற்குத் திரும்பிச் செல்லும் ஈழத்தமிழ் அகதிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது. கடந்த எட்டரை ஆண்டுகளில் 10 சதவீதமான ஈழத்தமிழ் மக்களே தமிழ்நாட்டு அகதி முகாம்களிலிருந்து சிறிலங்காவிற்குத் திரும்பிச் சென்றுள்ளனர்.

இவர்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பிச் செல்வதற்கான நுழைவிசைவுகளை இலவசமாக வழங்குவதற்கும், இவர்கள் இந்தியாவில் அனுமதியின்றித் தங்கியிருந்ததற்கான குற்றப்பணம் அறவிடப்படமாட்டாது என 2016 ஜனவரியில் இந்திய அதிகாரிகளால் தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஆயினும், தமிழ்நாட்டு அகதி முகாம்களில் தங்கியுள்ள ஈழத்தமிழ் மக்கள் சிறிலங்காவிற்குத் திரும்பிச் செல்வதில் விருப்பம் காண்பிக்கவில்லை. இவர்கள் தமது சொந்த நாட்டிற்குத் திரும்பிச் செல்வதற்குத் தயக்கம் காண்பிப்பதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன.

குறிப்பாக, இந்த மக்களின் வாழ்வாதாரமாகும். அதாவது தமிழ்நாட்டின் 107 முகாம்களில் வாழும் 62,000 வரையான ஈழத்தமிழ் அகதிகள் இந்திய மத்திய அரசு மற்றும் மாநில அரசிடம் இருந்து பல்வேறு நிவாரணங்களைப் பெறுகின்றனர்.

மேலும், கடந்த சில ஆண்டுகளாக ஈழத்தமிழ் இளைஞர்கள் மற்றும் யுவதிகளை தொழில் துறைகளில் குறிப்பாக பொறியியல் துறையில் இணைத்து பணியாற்றுவதற்கான நடவடிக்கையை தமிழ்நாட்டு அரசு மேற்கொண்டு வருகிறது. இதன்மூலம் தமிழ்நாட்டு அகதி முகாம்களில் வாழும் 36 ஆயிரத்து 800 வரையான இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்பைப் பெறத் தகுதி பெற்றுள்ளனர்.

தமது வாழிடங்கள் மற்றும் தொழில்களின் தரங்கள் குறைவாக இருப்பினும் கூட, சில அகதி முகாம்களில் வாழும் மக்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னேற்றி வருகின்றனர். தவிர, ஈழத்தமிழ் அகதிகளின் புதிய தலைமுறையினர் தமிழ்நாட்டிலேயே பிறந்து வளர்ந்துள்ளமையால் அவர்களைப் பொறுத்தளவில் சிறிலங்கா என்பது அவர்களுக்கு அந்நிய நாடாகவே உள்ளது.

தாங்கள் மீண்டும் சிறிலங்காவிற்குத் திரும்பிச் சென்றால், தமிழ்நாட்டில் தற்போது பெறும் நிவாரண உதவிகள் போன்ற நலன்களை சிறிலங்காவில் தங்களால் பெறமுடியாது என ஈழத்தமிழ் அகதிகள் கருதுகின்றனர். குறிப்பாக 2015 இல் சிறிலங்காவுக்குத் திரும்பிச் சென்றவர்களுக்கு நிவாரண உதவிகள் மற்றும் ஏனைய நலன்புரித் திட்டங்கள் வழங்கப்படவில்லை என்பதாகும்.



மலைநாட்டைச் சேர்ந்த ஈழத்தமிழ் அகதிகளுக்கு சிறிலங்காவில் சொந்த நிலம் இல்லை. இவர்கள் சிறிலங்காவுக்குத் திரும்பிச் செல்ல வேண்டுமாயின் இவர்களுக்கென சிறிய நிலப்பரப்பு சொந்தமாக வழங்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் இவர்கள் தமது நாட்டிற்குத் திரும்பிச் செல்ல விரும்பமாட்டார்கள். மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகளும் இங்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

தற்போது சிறிலங்கா மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளைப் பொறுத்தளவில் அகதிகள் நாடு திரும்புதல் என்பது முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய விடயமாகக் காணப்படவில்லை. ஆனால் தமிழ்நாட்டில் பெரும் எண்ணிக்கையான தமிழ் அகதிகள் தொடர்ந்தும் தங்கியிருக்கும் செலவைப் பொறுப்பதற்கு தமிழ்நாட்டு அரசால் இயலாத காரியமாகும்.

ஆகவே, இவ்விருநாடுகளும் இணைந்து இந்த மக்களின் பிரச்சினையை விரைவாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு தீர்வு எட்டப்படுமிடத்து இந்தியாவைப் பொறுத்தளவில் நீண்ட ஆண்டுகளாகத் தொடரும் பிரச்சினை ஒன்று தீர்க்கப்படும்.

அதேவேளை, சிறிலங்காவைப் பொறுத்தளவில் ஈழத்தமிழ் அகதிகளின் பிரச்சினை தீர்க்கப்படுமிடத்து அது இன நல்லிணக்கத்திற்கு வழிவகுக்கும்.

இந்த அடிப்படையில் நோக்குமிடத்து தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் சிறிலங்காவுடன் பேச்சுக்களை மீண்டும் தொடர்வதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளது.

ஈழத்தமிழ் அகதிகளை சிறிலங்காவிற்குத் திருப்பி அனுப்புதல் தொடர்பாக இவ்விரு நாட்டு அரசுகளுடன் விரைவில் கலந்துரையாடித் தீர்வை எட்ட வேண்டும். இதற்கான முழுமையான தீர்வுத் திட்டம் ஒன்று தயார்ப்படுத்தப்பட வேண்டும்.

இக்கலந்துரையாடலில் ஈழத்தமிழ் அகதிகள் சார்பாக அவர்களது பிரதிநிதிகளும் மற்றும் தமிழ்நாட்டு அரசுப் பிரதிநிதிகள், சிறிலங்காவின் வடமாகாண சபைப் பிரதிநிதிகள் இதில் கலந்து தீர்வைக் காண வேண்டும்.

இந்தியாவில் தொடர்ந்தும் தங்கவிரும்பும் ஈழத்தமிழ் மக்களுக்கு குடியுரிமையை வழங்குவது தொடர்பாக இந்தியா கருத்திலெடுத்துச் செயற்பட வேண்டும். அதாவது பாகிஸ்தான் மற்றும் ஆப்கன் அகதிகள் தொடர்பில் இந்தியாவால் முன்னெடுக்கப்பட்ட தீர்வை ஈழத்தமிழ் அகதிகள் தொடர்பிலும் பிரயோகிக்க வேண்டும்.

பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்க்கப்பட்ட பின்னர் தமிழ்நாட்டு அகதிமுகாம்களை மூடுவதற்கான நடவடிக்கையை அதிகாரிகள் முன்னெடுக்க முடியும்.

இதன்மூலம் சிறிலங்காவின் உள்நாட்டுப் போர் இடம்பெற்ற காலப்பகுதியை விட அதிக காலமாக இழுபறி நிலையிலுள்ள ஈழத்தமிழ் அகதிகளின் பிரச்சினை முடிவிற்கு வருவது நிச்சயமானதாகும்.

வழிமூலம் - The Hindu
ஆங்கிலத்தில்- T. Ramakrishnan
மொழியாக்கம் - நித்தியபாரதி



# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?” 353

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

இராணுவத்துக்கு அமெரிக்கா செலவிடுவதில் பாதியளவுக்கு ஐரோப்பா இப்போது செலவிட்டுக் கொண்டிருக்கிறது என்ற அவர்.ஆனால், வெறும் 15 சத வீத அளவுக்கான திறனையே எட்டுவதாகக் கூறினார்.

நெருக்கமான ஒத்துழைப்பு இதில் முன்னேற்றத்தை கொண்டுவர முடி




யும் என்றார்.

ஐரோப்பிய இராணுவ ஒத்துழைப்பை நேட்டோவுக்கு எதிர்ப்பானதாக அல்லாமல் அதன் துணையளிப்பாக சித்திரிப்பதற்கு பேர்லின், பாரிஸ் மற்றும் புரூசெல்ஸ் முனைந்து கொண்டிருக்கின்றன. PESCO உடன்பாடு பின்வருமாறு தெரிவிக்கிறது.

ஐரோப்பிய ஒன்றிய அரசுகளின் இராணுவத்திறன் வலுவூட்டப்படுவது நேட்டோவுக்கும் பயனளிப்பதாக இருக்கும். இது ஐரோப்பியத் தூணை வலுப்படுத்துவதோடு, அட்லாண்டிக் கடந்த சுமை-பகிர்வை வலுப்படுத்துவதற்கு தொடர்ச்சியாக வரும் கோரிக்கைகளுக்கு பதிலளிப்பதிலும் சேவை செய்யும்.

தொடர்ச்சியாக ஏமாற்றமளித்து வந்திருக்கின்ற ஒரு ஐரோப்பிய இராணுவத்திற்கான திட்டங்களை அமுலாக்க ஊக்கமளித்திருக்கின்றன என்பதில் வருணனையாளர்கள் பொதுவாக உடன்படுகின்றனர்.

1954 இல் ஐரோப்பாவின் பாதுகாப்பு சமூகம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கான ஒரு முதல் முயற்சி பிரான்ஸின் எதிர்ப்பை அடுத்து தோல்விகண்டது. அடுத்த பல தசாப்தங்களுக்கு எந்த மேலதிக முயற்சியும் நடக்கவில்லை. புதிய நூற்றாண்டின் திருப்பத்தின் போது, நெருக்கமான இராணுவ ஒத்துழைப்பை ஸ்தாபிப்பதற்கான முயற்சிகள் லண்டனிடம் இருந்து வந்த எதிர்ப்பால் தோல்வி கண்டன.




**நேட்டோவுக்கு எந்த எதிர்ப்பையும் மறுப்பதற்கும் வொன் டெர் லையன் முயற்சி செய்தார். அட்லாண்டிக் கடந்த கூட்டணி எப்போதும் தேசிய மற்றும் கூட்டுப் பாதுகாப்புக்கு பொறுப்பானதாக இருக்கும் என்று கூறிய அவர், ஐரோப்பிய ஒன்றியம். அதன் வலைப்பின்னல் கொண்ட பாதுகாப்பு மூலமாக, ஆபிரிக்க அரசுகளுக்கு உதவுதல் போன்ற நேட்டோவின் பகுதியாக இல்லாத நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என்று தெரிவித்தார்.**

இது அபத்தமானதாகும். டொனால்ட் ட்ரம்ப் தேர்வானமை மற்றும் பிரெக்ஸிட் ஆகிய இரண்டு முக்கியமான நிகழ்வுகள், நீண்டகாலமாக விவாதிக்கப்பட்டு வந்திருக்கின்றாயினும்

அமெரிக்காவின் நெருங்கிய கூட்டாளியாக பிரிட்டன், நேட்டோவுக்கு எந்த மாற்றும் தோற்றுவிக்கப்படுவதை தடுப்பதற்கு விரும்பியது.

ட்ரம்ப்பின் முதலில் அமெரிக்கா கொள்கையானது அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையிலான பதற்றங்களை கூர்மைப்படுத்தியிருக்கிறது. மத்திய கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவிலான அமெரிக்காவின் கொள்கை பேர்லினிலும் பரிஸிலும் தமது நலன்களின் மீதான தாக்குதலாகப் பார்க்கப்படுகிறது.

அத்துடன், ஆபிரிக்காவில் அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் சீனா ஆகிய நாடுகள் செல்வாக்குக்காக தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றன. ரஷ்யாவுடனான போருக்கான தயாரிப்புகளில் மட்டும் தான் ஐரோப்பிய சக்திகளும் அமெரிக்காவும் நேட்டோவின் மூலமாக நெருக்கமாக ஒத்துழைத்து வருகின்றன. ஆனால், அதிலும் கூட, இந்த மோதல் எந்த தூரத்திற்கு நெருக்கப்பட வேண்டும் என்பதிலான தந்திரோபாய பேதங்கள் நிலவுகின்றன.

அதேசமயத்தில், பிரெக்ஸிட்டானது ஐரோப்பிய இராணுவம் உருவாக்கப்படுவதற்கு இருந்த மிக முக்கியமான எதிரியை ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து அகற்றி விட்டிருக்கிறது.

PESCO உடன்பாட்டினால் ஐரோப்பாவுக்குள்ளான அத்தனை மோதல்



களும் வெல்லப்பட்டு விட்டதாகவோ, ஜேர்மனியும் பிரான்ஸும் இனி ஒரே நிலைப்பாட்டையே பின்பற்ற இருக்கின்றன என்றோ அர்த்தமில்லை. உடன்பாட்டுக்கு முன்பாகவே கூட, கூர்மையான பேதங்கள் எழுந்தன.

இந்த உடன்படிக்கையை, ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் தீர்மானகரமாக தலையீடு செய்யத்தக்க பெரும் இராணுவங்கள் கொண்ட ஒருசிறிய, பிரத்தியேகமான அரசுகளின் குழுவோடு மட்டுப்படுத்திக் கொள்ள பரிஸ் விரும்பியது. ஆனால், பேர்லினோ முடிந்த அளவுக்கு மிக அதிகமான பங்கேற்பு நாடுகளையும், பரந்து விரிந்த செயற்பாடுகளையும் கொண்டிருக்க அழுத்தமளித்தது. ஜேர்மனியே வென்றது.

**ஒரு மனதான முடிவுகள் அவசியப்படுவதால், முடிவெடுப்பது சிரமமாகவே இருக்கும். ஆனாலும், அதிகமான அளவில் தேசியவாத மற்றும் ஐரோப்பிய ஒன்றிய-விரோத மனோநிலையால் ஆதிக்கம் செலுத்தப்படுவதாக இருக்கின்ற கிழக்கு ஐரோப்பிய அரசுகள் அமெரிக்காவின் பின்னால் சென்று விடக் கூடும் என்று பேர்லின் அஞ்சியது.**

PESCO தொடர்பில் இராணுவச் செலவினங்களில் ஏற்படவிருக்கும் மிகப்பெரும் அதிகரிப்பு ஐரோப்பாவில் வர்க்கப் பதற்றங்களை தீவிரப்படுத்தும். ஒவ்வொரு ஐரோப்பிய நாட்டிலுமே வர்க்கப் பதற்றங்களுக்கு, அரசு ஒடுக்குமுறையின் எந்திரத்தை பெருமளவில் கட்டியெழுப்புவதைக் கொண்டுதான் ஆளும் உயரடுக்கினர் ஏற்கனவே பதிலிறுத்துக் கொண்டிருக்கின்றனர். இது வலது-சாரி மற்றும் தேசியவாத சக்திகளை ஊக்குவித்துக் கொண்டிருப்பதோடு ஐரோப்பிய ஒன்றியத்தை சுக்குநூறாகக் கிழித்துக் கொண்டிருக்கிறது.

(கேள்வி தொடரும்...)



தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. ‘உன்னைச் சரணடைந்தேன்’ என்ற அவரது தொகுப்பில் ‘யாழில் கம்பன்’ பற்றிய தொடர் பதிவு இது.



# கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 12

# உன்னைச் சரணடைந்தேன்

ஐந்தாவது தமிழாராய்ச்சி மாநாட்டுப் பயணம் 05.01.1981

### மேடையில் நின்றபடி எம்.ஜி. ஆருடன் பேசினேன்

பேச்சு முடிகிற நேரம் மேடையில் நின்றபடியே எம்.ஜி.ஆரைப் பார்த்து, ‘மைக்’ கில் பேசத் தொடங்கினேன். சபையில் பெரும் பரபரப்பு. “உங்களின் நேரடி அழைப்பில் வந்திருக்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தை விட்டால், இனி உங்களோடு பேச எனக்கு வாய்ப்புக்கிடைக்காது. பெரும் கொடையாளியான உங்களிடம் ஒன்றைக் கேட்கப் போகிறேன்'' என்று சொல்லி நான் நிறுத்த, சபை, பரபரப்பின் உச்ச நிலையை அடைந்தது. ‘கமரா’க்களெல்லாம் என்னை நோக்கித் திரும்பின.

அப்போது ‘வீடியோக் கமரா’க்கள் அதிகம் வந்திருக்கவில்லை. பெரிய பெரிய சினிமாக் ‘கமரா’க்கள் தான் அங்கிருந்த ‘கமரா’க்கள் எல்லாம் என்னையும் எம்.ஜி. ஆரையும் மாறி மாறி ‘போக்கஸ்’ பண்ணத் தொடங்கின. சபையில் இருந்தவர்கள் எல்லோரும் எழும்பி நின்று பார்க்கத் தொடங்கினர். எம்.ஜி.ஆர். என்னை நிமிர்ந்து பார்த்து, கண்களால் ‘‘என்ன வேண்டும்?'' எனக் கேட்டார்.

நான் என்ன கேட்கப் போகிறேனோ என சபையில் பெரும் எதிர்பார்ப்பு. இளமை தந்த ஊக்கத்தில், நான் வெகு ‘கூலாக’ எம்.ஜி.ஆரிடம் ‘‘உங்களை நான் சந்தித்ததை ஊரில் சென்று நிரூபிக்க, எனது ‘ஓட்டோக் கிராபில்’ கையெழுத்திட்டுத் தாருங்கள்'' எனக் குழந்தைத்தனமாய்க் கேட்டேன். சபையில் கொல்லென்று பெரிய சிரிப்பு. அப்போது எனக்கு 24 வயது தான் ஆகியிருந்தது.


### ஆசீர்வதித்த எம்.ஜி.ஆர்.- அழைத்துச் சென்ற அறிஞர்

எம்.ஜி.ஆர். கைகாட்டி என்னை அருகில் அழைத்தார். எவரைப் பற்றிய கவலையும் இல்லாமல் மேடையின் முன்னே இடப்பட்டிருந்த படி வழியாக, அவர் அருகில் சென்றேன். அவரது காலில் தொட்டு நான் வணங்க, அவர் என்னை உச்சி முகர்ந்து ஆசீர்வதித்தார். பின்னர் ‘ஓட்டோக்கிராபில்’ கையொப்பமிட்டுத் தந்தார். அடுத்த நிமிடமே நான் அன்றைய சபையின் கதாநாயகன் ஆனேன். இன்னும் சில நிமிடங்கள் எம்.ஜி.ஆர். அருகில் நிற்க மனம் விரும்பியது.

அப்போது ‘சஃபாரி சூட்டுடன்’ வந்த ஓர் உயரமான மனிதர், என் கையைப் பிடித்து கரகரவென மண்டபத்துக்கு வெளியில் இழுத்துச் சென்றார். அவர் யாரென்றே எனக்குத் தெரியவில்லை. வெளியில் இருந்த ஒரு புத்தகக் கடைக்குள், என்னை அழைத்துச் சென்ற அவர், ‘‘துளசியும் கம்பனும்'' எனும் ஒரு நூலை விலை கொடுத்து வாங்கித் தந்து ‘‘பொருத்தமா இராமாயணம் சொன்னே, நல்லா வருவே!'' என வாழ்த்திச் சென்றார்.

சென்னைப் பல்கலைக்கழக சமஸ்கிருதப் பேராசிரியர், சங்கரராஜு நாயுடு தான் அவர் என்பதைப் பின்னர் தெரிந்து கொண்டேன்.







### நான் கதாநாயகனானேன்!

அவர் சென்றதும், கடையில் இருந்து வெளியில் வந்தால், என்னிடம் கையொப்பம் வாங்க பெரிய ‘கியூ’ நின்றது. அப்போதைய கூட்டணி எம்.பிக்கள் அனைவரும், என்னைச் சூழ்ந்து கொண்டனர். சாவகச்சேரி எம்.பி. நவரட்ணம் சோடா வாங்கித் தந்தார்.

சபையில் இருந்த பல்கலைக்கழக அறிஞர் பலர் தேடி வந்து எனக்கு வாழ்த்துச் சொல்லினர். பேராசிரியர் இந்திரபாலா அந்த நிகழ்ச்சியைப் படம் பிடித்து, பின்னர் யாழில் கொண்டு வந்து தந்தார். முதல் நாள், “இது அறிஞர்சபை, இங்கு உங்களுக்கு என்ன வேலை?'' என்று கேட்ட சண் முகலிங்கம் அவர்களும், தூரத்தில் முகம் கறுத்து நின்றமையைக் கண்டேன்.

மொத்தத்தில் அன்றைய அதிஷ்ட சம்பவத்தால், மற்றவர் மத்தியில் நான் கதாநாயகன் ஆனேன். மகிழ்ச்சி தாங்கவில்லை. குமாரதாசனுக்கு என்னை விட மகிழ்ச்சி. என்னோடு உடன் வந்தவர்கள், சந்தோஷத்தில் நிலத்தில் கால் படாமல் திரிந்தார்கள். திகட்டத் திகட்ட, பல நாட்டு அறிஞர்களும், என்னைச் சூழ்ந்து வாழ்த்தினர். என்னோடு புகைப்படம் பிடித்துக் கொண்டனர். அமெரிக்காவில் இருந்து வந்திருந்த ஸ்ரீதரன் என்ற ஈழ ஆதரவாளர், என் பேச்சைப் பாராட்டிக் கண் கலங்கினர்.

### முதல் இந்திய நண்பன்

மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியிருந்த எனது கைகளை, திடீரென ஓர் இந்திய இளைஞன் வந்து பிடித்துக் கொண்டு, கண்ணீர் வழிய விம்மினான். ‘‘ஈழத்தில் தமிழர்கள் படும் துன்பத்தைக் கண்டு நாங்கள் வருந்துகிறோம். எப்போதும் நாங்கள் உங்களோடு இருப்போம்'' என்று, உணர்ச்சி வசப்பட்டான். அவன் ஒரு சட்டக் கல்லூரி மாணவன். நக்கீரன் என்பது அவனது பெயர். சென்னையில் அவனது தந்தை ‘ஸ்ரூடியோ’ ஒன்றை வைத்திருந்தார்.

மாநாட்டைப் படம் பிடிக்க வந்த அவரோடு நக்கீரன் வந்திருந்தான். முகவரி தந்து அவன் எங்களைச் சென்னைக்கு அழைத்தான். பின்னர் அவன் வீட்டுக்கும் சென்று வந்தோம். நெருங்கிய நண்பனாகி விட்ட அவன், பின்னாளில் யாழ்ப்பாணத்துக்கும் வந்து சென்றான். இப்போது சென்னையில் நீதிபதியாய் இருக்கிறான். இவன் தான் இந்தியாவில் எனக்குக் கிடைத்த முதல் நண்பன்.

(தொடரும்...)

# ஜிந்தோட்டை சம்பவம்: மீண்டும் இனவாதிகள் அரங்கேற்றிய கொடுமை



## வேலியே பயிரை மேய்ந்த வழமையான கதைதான் இம்முறையும்

கடந்த அரசு கால வடுக்கள் மனதை விட்டும் நீங்காத நிலையில் ஜிந்தோட்டை நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன. அளுத்கம சம்பவம் ஓர் ஓட்டோ சம்பவத்தின் அடியாக ஆரம்பித்தது போல, ஜிந்தொட்டை சம்பவம் ஒரு மோட்டார் சைக்கிள் விபத்திலிருந்து புகைந்து பற்றியது என்று சொன்னால் வரலாற்று நினைவுள்ள எவரும் மறுக்க மாட்டார்கள்.

வீடுகள் உடைப்பு, கடைகள் தீ வைப்பு, வாகனங்கள் மற்றும் ஏனைய பொருள்கள் சேதம் என பொருளாதார ஒழிப்பு நடவடிக்கைகள் இனவாதிகளால் ஜிந்தோட்டையிலும் அரங்கேற்றப்பட்டன.

பொலிஸ் தகவல்களின்படி, இவ்வசம்பாவிதத்தில் சேதமடைந்த வீடுகள் - 66 எனவும், சேதமடைந்த வியாபார நிறுவனங்கள் - 26 எனவும், சேதமடைந்த பள்ளிவாசல்கள் இரண்டு எனவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், பாதையில், வீடுகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 10 வாகனங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.


இச்சம்பவத்தில் இதுவரை 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஐவர் காயமடைந்த நிலையில் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

### நடந்தது என்ன?

கடந்த காலத்தில் அளுத்கமை முஸ்லிம்கள் தமது கவலைகளாக முன் வைத்தமை நினைவுக்கு வருகின்றது.

ஜிந்தோட்டையிலும் சம்பவத்தை அனுபவித்த மக்கள், ஒருபடி மேலே சென்று பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டவர்களும் சேர்ந்தே சேதம் ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர் எனவும், இதனை தான் கண்ணால் பார்த்தேன் எனவும் எந்த இடத்திலும் சாட்சி கூற வரத் தயார் எனவும் கூறுவதை நாம் உண்மையான வீடியோ காட்சிகளில் கண்டு கவலைப்பட்டோம்.





ஜிந்தோட்டையில் இவ்வாறான ஒரு நிலைமை வரும் என பாதுகாப்புப் பிரிவு ஏற்கனவே அறிந்திருந்தும் அதனைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுப்பதில் தவறிழைத்து விட்டமை குறித்து கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

அப்பிரதேச செய்திகளை வெளியிட வேண்டாம் என பொலிஸ் தலைமையகமும், சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னநாயக்கவும் அறிவித்தல் விடுத்திருந்தமையும், உண்மையான செய்திகளையும் வதந்தி சாயம் இட்டு பொய்யாக்கமுற்பட்டதையும் நாம் அனைவரும் ஊடகங்களில் கண்டோம்.

பெரும்பாலான சகோதர ஊடகங்கள் ஜிந்தோட்டை அசம்பாவிதங்களில் சேதங்களே ஏற்பட வில்லையென்பது போலவும் ஒரு சில வீடுகளின் ஜன்னல் கண்ணாடிகள் தான் கல்வீச்சுத் தாக்குதலில் உடைந்துள்ளன போலவும் காட்டின. இது ஒரு சமூகத்தின் முதுகெலும்பான பொருளாதார அழிவை பட்டப்பகலில் மூடிமறைக்க எடுத்த ஊடக துஷ்பிரயோகம் என்றே பார்க்கப்படுகின்றது.

உப்புத் திண்டவன் தண்ணீர் குடிக்க முடியாது என பிடிவாதம் பிடிப்பது நியாயமற்றதாகும். முஸ்லிம்கள் விட்ட தவறுகள் தான் இந்த இனவாத செயற்பாடுகளின் பின்னணிக் காரணமும், உடனடிக் காரணமும் ஆகும் என்பது வெளிப்படையாகச் சொல்ல முடியாத ஒரு கசப்பான உண்மையாகும்.

தர்கா நகரில் விட்ட தவறையே காயம் காய்வதற்கு முன்னர் மீண்டும் விட்டுள்ளனர் என பல சமூக புத்திஜீவிகளும் சிந்தித்து கவலைப்படுகின்றனர். இந்த நாட்டில் இனவாத விதைகள் பாடசாலை மாணவர்கள் உள்ளங்கள் தொடக்கம் தூவப்பட்டுள்ளன. அவற்றுக்கு நீர் ஊற்றும் பணியில் ஈடுபடாது தவிர்த்துக் கொள்வது மாத்திரமே இனவாதிகளின் செயற்பாட்டுக்கான தடைப்புள்ளியாகும்.

### இனவாதிகளின் சிந்தனை

இனவாதக் குட்டைகள் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் உறைந்து போயுள்ளன. அவை சில நல்லவர்களிடையேயும் குழுங்கும் போது நல்ல நீரையும் அசுத்தமாக்கி விடுகின்றன. எல்லோரையும் நல்லவர்களாக சிந்திக்க வைக்கும் ஒரு யதார்த்தமான முயற்சி இஸ்லாம் காட்டும் வழிகாட்டலில் தான் உள்ளது என்பதை இந்த இடத்தில் ஞாபகப்படுத்தாது போனால் அது தவறாகும்.

மீசை முறுக்கிக் கொண்ட செயற்பாடு எமது நாட்டில் ஆபத்தானது என்பது தான் இனவாத வன்முறைகள் அனைத்தினதும் படிப்பினையாகும் என்பதை படித்தவர்கள் மட்டுமல்ல படியாதவர்களும் விளங்கிக் கொள்கின்றனர். அதற்காக நாம் அடிமைகளாக வாழ்வதா? என்று யாராவது கேட்டால் அதற்கு ஆம்! என்று பதில் சொல்லவும் முடியாது என்பது மட்டுமல்ல கூடாது என்றே கூறுவது பொருத்தமாகும்.

எமது நாட்டிலும் முஸ்லிம்கள் இன்று எடுப்பார் கைப்பிள்ளையாகவும், செல்லாக் காசுகளாகவும் மாறுவதற்கும், அடிப்படைவாதம், இனவாதம் எனும் போர்வையில் உடைமைகள் அழிக்கப்படுவதற்கும் பிரதான காரணங்கள் பல எமது அறிஞர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றன.

இந்த நாட்டில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்கள் தமது அனைத்து விவகாரங்களையும் சகவாழ்வின் அடிப்படையில் அமைத்துக் கொள்ளும் போதே இந்நாட்டில் இனவாத சிந்தனையை ஒழிக்க முடிகின்றது.

மாறாக, வன்முறை, அடிப்படைவாதம் என்பன பற்றி கனவிலும் நினைத்துப் பார்க்கக் கூடாது என்பதே முஸ்லிம் சமூகத்தின் புத்திஜீவிகள், நியாயமாக சிந்திக்கும் சகலரதும் தீர்மானமாகும்.

எமது நாடு கடந்த 30 வருட காலம் முகம்கொடுத்த யுத்தப் படிப்பினை இதனைத் தான் எமக்குச் சொல்லியது. திரைப்படங்களின் தாக்கத்தினாலோ அல்லது ஏனைய நாடுகளை முன்மாதிரியாகக் கொண்டோ எமது நாட்டில் வன்முறைக்குப் பதில் வன்முறை என்ற தீர்மானத்துக்கு வருவது தவறானது என்று சொன்னால் தூரநோக்கோடு சிந்திப்பவர்கள் மறுக்க மாட்டார்கள்.

அடிவாங்கும் போது மாத்திரம், நாம் அனைவரும் முஸ்லிம்கள், ஒரு கலிமாவை மொழிந்தவர்கள் என கோஷம் எழுப்பிவிட்டு மீண்டும் பழைய குருடி கதவைத்திறவடி என்ற நிலைக்குச் சென்று விடுகின்றோம். சமூக ஒற்றுமை, எப்போது இழக்கப்படுகின்றதோ அப்போது பலம் குன்றி சருகுகளாக மாறி விடுவோம் என அல்குர்ஆன் எமது உயர்வுக்கான காரணத்தை வழிகாட்டிக் கொண்டே இருக்கின்றது.

தற்பொழுது நாட்டில் கடந்த அரசில் காணப்பட்டது போன்றே இனவாத சூழல் ஒன்று உருவாகியுள்ளதைக் காணலாம். முஸ்லிம்கள் கடந்த காலத்தைப் போன்றே சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்படுகின்றார்கள். துவேசப் பேச்சுக்கள் பரவலாக காதில் கேட்கின்றன.

கடந்த கால வரலாறு மற்றும் நிகழ் கால நிலைமைகள் என்பவற்றை வைத்துப் பார்க்கும் ஒருவர், இந்த நாட்டில் இனவாதத் தீயை அணைப்பதற்கு மாற்றுவழியைத் தேட வேண்டும் என்ற முடிவுக்கே வரவேண்டியுள்ளார்கள். இந்த நாட்டில் எமது ஆரம்பகால முன்னோர்கள் அமைதியாகவும், நிம்மதியாகவும் சகோதர சமூகங்களிடத்தில் கௌரவமாகவும், இஸ்லாத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டு, தஃவாவும் செய்து கொண்டு வாழ்ந்திருக்கின்றார்கள்.

இந்த நாட்டிலுள்ள இனவாத அமைப்பான பொதுபல சேனா கடந்த சனிக்கிழமை வெளியிட்டிருந்த அறிக்கையில் பல்வேறு அழுத்தங்களை முஸ்லிம் சமூகத்துக்கு எழுத்துக்களால் வடித்திருந்தது. முஸ்லிம்கள் தானாக வலிந்து கட்டிக்கொண்டு பிரச்சினைக்கு வரவேண்டாம். ஒரு சில சம்பவங்கள் நிகழும் போது பொறுமையாக பொத்திக் கொண்டிருக்க வேண்டும். தூக்கிப் பிடித்துக் கொண்டு வந்தால் விளைவு மோசமாகும். இப்படியான ஒரு நிலைமை வந்தால் அதனைத் தடுக்க யாராலும் முடியாது என்பதே அவர்கள் சொல்லவந்த கருத்தின் சுருக்கமாகும்.

கம்பு எடுத்துக் கொடுத்து அடிவாங்கும் நிலைக்கு நாம் செல்கின்றமையைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். சமூகப் பற்றுள்ள மூத்த புத்திஜீவிகள் கூறும் அறிவுரைகளில் அறிவு பெறும் மனப்பாங்கை வளர்த்துக் கொள்ள வேண்டும். எமக்கு வெளிப்படையாகத் தென்படும் ஓர் உண்மையை சரியான இடத்துக்கு கொண்டு போய்ச் சேர்க்க வேண்டிய வழி முறைகள் எமது மூத்த அனுபவசாலிகளிடத்தில் உள்ளன.

சூடான இரத்தத்தால் உந்தப்பட்டு புத்தியை மீறிச் செயற்பட முற்படக் கூடாது. அவ்வாறான நிலைமைகள் சமூகத்தின் நிலைமையை மோசமாக்கும். தலைக்கு மேல் வெள்ளம் போகாமல் பார்த்துக் கொள்வது அனைவரினதும் பொறுப்பாகும். கூடி நின்று கூத்துப் பார்ப்பவர்களுக்கு காட்சிப் பொருள்களாக நாம் மாறாதிருக்க முயற்சிப்போம். ★

கஹட்டோவிட்ட முஹிடீன்



# மாவீரர் வார நினைவேந்தல்; சிரம் தாழ்த்தி வணங்குவோம்!

தாயக விடுதலைக்காக தமது இன்னுயிரை ஈந்த ஆயிரம் ஆயிரம் விடுதலைப் புலிகளின் மாவீரர் வார நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் தமிழர் தாயகப் பகுதிகள் எங்கும் வெகு உணர்வெழுச்சியுடன் ஆரம்பமாகின்றன.

இனத்தின் விடுதலைக்காகப் போராடி, களத்தில் வீரச்சாவடைந்து, மண்ணுள் வித்தாகி, விழிகள் மூடித் துயில் கொள்ளும் எங்கள் பிள்ளைகளின் – மாவீரர்களின் – துயிலும் இல்லங்கள் மீண்டும் உயிர்பெற்று – எழுச்சி பெற்று– வருகின்றன.

தற்போது 2008 ஆம் ஆண்டுக்கு முந்திய காலம் நினைவுக்கு வருகிறது. இறுதியாகக் கடந்த 2008 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வன்னி பெருநிலப் பரப்பு இருந்தபோது மாவீரர் நாள் நினைவுகள் வருடா வருடம் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

இந்தக் கார்த்திகை மாதம் தமிழர் தாயகப் பிரதேசம் எழுச்சிக் கோலம் கொண்டிருக்கும். எங்கும் சிரமதானங்கள், மரம் நடுகை நிகழ்வுகள், துயிலும் இல்லங்கள் அழகுபடுத்தும் பணிகள் என்று அமர்க்களப்படும்.

அந்த நினைவுகளுடன் எம் மாவீரர்களுக்கு இந்த மாவீரர் நாளிலும் சிரம் தாழ்த்தி வணங்குவோம்.






## துயர் நீக்கி... தொடர்க பயணம்!

அஞ்சாக்களம் கண்டு; போரில்
ஆடும் பகையின் திறன் முறித்து; இமைகள்
துஞ்சாது விழித்திருந்தோர்; என்றும்
தூங்குவரோ?
அட! போடா...!!
பஞ்சு போன்ற மனத்துடனே; நீள்
படுக்கையதில் துயில் கொள்ளும்
வெஞ்சமரின் வேங்கைகள் நாம்!
என்றுமுங்கள்
நெஞ்சமதில் குடியிருப்போம்
சூழ் நீள் துயரை விட்டெறிந்து
நெடும் பயணமெனினும் நடவுங்கள்
என்றும் தொடரும் உங்களுடனே
எம் நிழல்கள்...!

-வீரவாகு மனோகரன்
உடையார்கட்டு

## மாவீரர் தினம் ஆரம்பம்; அதை ஆராதிப்போம் விடுதலைக் கனவோடு!

அழியா நினைவுகளை ஏந்தும்...!
ஆராதனைக்குரிய காலம் 'நவம்பர்'
இந்த நாளை; மாதத்தைத் தியாகத்தை
புனிதப்படுத்துவோம்; ஆராதனையால்...!

மார்கழி தவமிருக்கும் மறவர்தம்
ஆன்மாக்களே ஆயத்தமாகுங்கள்!
தியாக தீபங்களே தீப ஒளி சிந்துங்கள்
செகத்தினை ஆளுங்கள் விடுதலைக் கனவோடு...!

விந்தையான மனிதர் சூழுமுலகில்
பந்த பாசம் துறந்து இனம் காக்க
மந்தாரப் பொழுதுகளில் நடந்தனர் – மறவர்
எங்கள் விடுதலை வேண்டிப் படைசுமந்தே!

சங்கத்தமிழ் போற்றும் துர்க்கையளே
எங்கள் மறவர் நோன்பு சிறக்கவருள்
சாமுண்டி தமிழர் துயர்தீர இனிஒரு
தரமான வழிசெய் பாவியரை வழிப்படுத்த...!

சண்டமுண்டராகி நின்றாடும் (பர)வியரை
குண்டர் போல் நடக்குமரசியல் அதமரை
வம்பு பேசும் தினமொரு கதையரை அடக்க
தேவி தமிழச்சி நீ திரிசூலியாக வா! நேரமிது!

மண்டைதீவு மகிழ்நன்
கை.பேரின்பநாயகம்

# கிளிசரீடியா பயிர்ச்செய்கை

**பொதுப்பெயர்**-சீமைக்கிளுவை
**தாவரவியல் பெயர்** - Gliricidia maculate
**குடும்பம்** - Fabaceae

**பயன்பாடு**

★அதிகமாகநிழலகளுக்காகவும் பசுந்தாட் பசளைக்காகவும் வளர்க்கப்படுகிறது

★நெற்செய்கையில் கிளிசரீடியா இலைகளை பசுந்தாட் பசளையாக பாவித்து ஏக்கருக்கு 200 புசல் விளைச்சல் பெறக்கூடியதாகஉள்ளது

★பசுந்தாட் பசளையில் உள்ள போசணை உள்ளடக்கம் 2.9% N
0.5 % P2O5
2.8% K2O

★ ஊடுபயிராக 1 மீற்றர், 1.5 மீற்றர் இடைவெளியில் நட்டு வளர்த்து இதற்கிடையில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளலாம். இதனால் பயிருக்கு சிறந்த நுண் காலநிலையை ஏற்படுத்தி விளைச்சலை அதிகமாக பெறக்கூடியதாகவுள்ளது

★சராசரியாக 20 வீதம் குறை நிரப்பு புரதத்தைக் கொண்டுகாணப் படுவதால் கால் நடைத் தீவனமாக விளங்குகிறது.

★கிளிசரீடியா காலத்துக்குக் காலம் கத்தரித்துப்பராமரிப்பதால் இலையைப் பசளையாகவும் தடியைவிறகிற்காகவும் பயன்படுத்தலாம்.

★வேர்கள் பயிருக்குத் தீங்கு விளைவிப்பது இல்லை. மற்றும் கொக்கோ வனிலா தாவரங்களுக்கு ஆதாரமளிக்கும் மரமாகவிளங்குகிறது.

★தண்டுப் பகுதி உயிர் கரி தயாரிப்புக்கு பயன்படுத்தப்படுகிறது.

★உக்கல் தன்மைக்கும் கறையான் பாதிப்பிற்கும் எதிர்ப்புத் தன்மை உடையாகையால் சிறந்தசேதனைப் பசளையாகவும் பக்கவிளைவு அற்ற தாவரப் பீடை நாசினியாகவும் பாவிக்கப்படுகின்றது.

★தோட்டத்தில் கிளிசரீடியாவை வரிசையாக வளர்க்கும் போது பீடைகளுக்கு வெறுப்பூட்டியாக பீடையின் வளர்ச்சியைத் தடுப்பவையாகவும் தொழிற்படுகிறது



வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 1 – 30

**சூழல் காரணிகள்**

★பரவலான மழைவீழ்ச்சிவிரும் பத்தக்கது.

★நன்குநீர் வடியும் மண்; சிறந்தது.

★வெப்பநிலை 15 - 30$^{0}$C வரை

**இனப்பெருக்கமுறை**

இலிங்கமுறைமற்றும் இலிங்கமில் முறை மூலம் இனப்பெருக்கம் செய்ய முடியும்.

1.**இலிங்கமில் முறை** - தண்டுத் துண்டம் மூலமாக இலகுவான முறையில் இனப்பெருக்கம் செய்யப்படுகிறது. 6 அடிநீளமான தண்டுத் துண்டங்கள் மூலம் இனப்பெருக்கம் செய்யலாம். இதன் மூலம் குறுகிய காலத்தில் பயன் பெறமுடியும்.

2.இலிங்கமுறை- விதைகளை நேரடியாகநடுகைசெய்தல்,பொலித்தீன் பைகளில் இட்டுநாற்றுக்களை உருவாக்கல் மற்றும் நாற்றுமேடையில் நாற்றுக்களை உருவாக்கல் மூலம் இனப் பெருக்கம் செய்யலாம்.

**நடுகைமுறை**

★சிறுபோக பெரும்போக மழை ஆரம்பத்துடன் நடுகை செய்தல் சிறப்பானது.

★நடுகை இடைவெளி(வீதி முறைப் பயிர்ச் செய்கை) -0.5 மீற்றர் X 0.5 மீற்றர்

★ஊடு பயிராக செய்கை பண்ணப்படுவதாயின் 1மீற்றர், 1.5 மீற்றர் இடைவெளி

**பயிராக்கவியல்**

★ நன்கு தயார் படுத்தப்பட்ட நாற்றுமேடையில் விதைகளை இட்டு; 30 - 60 நாள்களின் பின்; நாற்றுக்களை வயலில் மாற்றி நடுகை செய்யலாம்.

★அவரையத் தாவரமாகையால் விசேடபசளையிடல் தேவையில்லை.

★1.5 -2 வருடங்களின் பின்பு கத்தரித்து நடுகைக்கானதண்டுத் துண்டங்கள் பயன்பெறலாம் .

ல.கீர்த்திகா,
விவசாயப் போதனாசிரியர்
கிளிநொச்சி, கிழக்கு.



# இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவராகிறார் ராகுல் காந்தி

## 20 ஆண்டுகளின் பின்னர் மகனுக்காக விட்டுக்கொடுக்கிறார் சோனியா

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து சோனியா காந்தி விலகுகிறார். அந்த இடத்துக்குப் புதிய தலைவராக ராகுல் காந்தி தேர்வு செய்யப்படுவார்.

கட்சித் தலைவர் பதவிக்கு டிசெம்பர் 16இல் தேர்தல் நடைபெறும் என கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அன்றைய தினம் கட்சியின் புதிய தலைவராக ராகுல் போட்டியின்றித் தேர்வாவார் என எதிர்பார்க்கப்படுகிறது.



தற்போது காங்கிரஸ் கட்சியின் தலைவராக சோனியா காந்தி பதவி வகித்து வருகிறார். 70 வயது நிறைந்த அவர் கடந்த 1998 ஆம் ஆண்டு மார்ச் 14 இல் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். தலைவராக அவர் 19 ஆண்டுகள் நீடித்துள்ளார்.

இந்த நிலையில், கட்சிக்கு வலிமை சேர்க்கும் வகையில் ராகுல் காந்தியை தலைவராக்க மூத்த தலைவர்கள் பலர் வலியுறுத்தினர். ராகுல் காந்தி கடந்த 2013ஆம் ஆண்டு ஜனவரி 19 ஆம் திகதி முதல் துணைத் தலைவராகப் பதவி வகித்து வருகிறார். 4 ஆண்டுகளுக்கும் மேல் பதவியில் நீடித்து வரும் அவர் தலைவராவதற்கு செயற் குழுவின் முறையான ஒப்புதல் பெற வேண்டும்.

அதன்படி, டில்லியில் சோனியா காந்தி தலைமையில் கட்சியின் செயற்குழுக் கூட்டம் நேற்று நடந்தது. இதில், ராகுல் காந்தியை தலைவராக தேர்வு செய்யத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானம் நிறைவேறிய நிலையில் அவரை எதிர்த்து யாரும் போட்டியிட வாய்ப்பில்லை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றது.

கட்சி தலைவர் பதவிக்கான வேட்பு மனுதாக்கல் டிசெம்பர் முதலாம் திகதி ஆரம்பமாகிறது. வேட்பு மனு தாக்கல் செய்ய கடைசி நாள் டிசெம்பர் 4. தேர்தல் நடந்தால் முடிவுகள் 19 ஆம் திகதி அறிவிக்கப்படும் எனக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு உள்ளது.

# நடிகை தீபிகாவை உயிருடன் எரித்தால் ரூ.ஒரு கோடி பரிசு

தீபிகாவை உயிருடன் கொளுத்தினால் ஒரு கோடி ரூபா பரிசு வழங்கப்படும் என்று மதவாத அமைப்பு ஒன்று அறிவித்தமையால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நடிகை தீபிகா படுகோனே, பத்மாவதி படத்தில் ராணி பத்மாவதியாக நடித்திருக்கிறார். இந்தப் படத்திற்கு நாடு முழுவதும் கடும் எதிர்ப்பு கிளம்பி உள்ளது. குறிப்பாக உத்தர பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களில் கடும் எதிர்ப்பு உள்ளது.

ராணி பத்மவாதியைத் தவறாக சித்துரித்திருப்பதாகக் கூறி இந்த எதிர்ப்புக் கிளம்பி உள்ளது. படத்துக்கு தணிக்கை சான்றிதழும் தாமதப்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் வருகிற டிசெம்பர் முதலாம் திகதி வெளிவருவதாக இருந்த படம் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.



இந்த நிலையில் உத்தர பிரதேச மாநிலம், பரேலியில் அகில இந்திய பாரதீய சத்ரிய மகாசபா என்ற அமைப்பினர் பத்மாவதி படத்துக்கு எதிராக பிரமாண்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள்.

மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்கு சென்று படத்தை திரையிடக்கூடாது என்று மனு கொடுத்தனர். பின்னர் தீபிகா மற்றும் இயக்குநர் சஞ்சய் லீலா பன்சாலி ஆகியோரது உருவ பொம்மைகளை அவர்கள் எரித்தனர்.

அதன் பின் நடந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அந்த அமைப்பின் இளைஞர் பிரிவு தலைவர் புவனேஸ்வர் சிங் ''நடிகை தீபிகா படுகோனேவை உயிருடன் கொளுத்துபவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் பரிசு வழங்கப்படும். ராணி பத்மாவதியின் தியாகம் தீபிகாவுக்குத் தெரியாது.

''உயிருடன் கொளுத்தப்பட்டால் எப்படி இருக்கும் என்பதை தீபிகா தெரிந்து கொள்ள வேண்டும்'' என்றார். இது பொலிவுட் திரை நட்சத்திரங்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

ராணி பத்மாவதி எதிரிகளிடமிருந்து மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக தன் தோழிகளுடன் நெருப்பில் குதித்து மாண்டார் என்று வரலாறு கூறுவது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று ஹரியானா மாநிலத் தின் பா.ஜ.கவின் செய்தி ஒருங்கிணைப் பாளர் சுராஜ் பால் அமு, தீபிகா மற்றும் இயக்குநர் சஞ்சய் லீலா பன்சாலியின் தலையைக் கொண்டு வருபவர்களுக்கு ரூ.10 கோடி பரிசளிக்கப்படும் எனத் தெரிவித்திருக்கிறார். மேலும் அலாவுதீன் கில்ஜியாக நடித்த ரன்வீர் சிங்கின் காலையும் உடைக்க வேண்டும் என்றும் அவர் பகிரங்க மிரட்டல் விடுத்துள்ளார்.

# பொலிஸ் நிலைய வாசலில் மேடை போட்டு குத்தாட்டம் ஆடிய அதிகாரி இடைநிறுத்தம்

## மத்திய பிரதேசத்தில் சம்பவம்

மத்திய பிரதேச மாநிலம் விதிஷா மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலைய வாசலில் மேடை அமைத்து இந்தி படபாடல்களுக்கு ஆபாச நடனம் ஆடியதால் பொலிஸ் அதிகாரி இடைநிறுத்தம் செய்யப்பட்டார்.

மத்தியபிரதேச மாநிலம் விதிஷா மாவட்டத்தில் திப்னா கெதா என்ற கிராமத்தில் உள்ள பொலிஸ் நிலையத்தின் இன்ஸ்பெக்டராக யோகேந்திர பார்மர் பதவி வகிக்கிறார். இவர் இந்த நிலையத்தின் பொறுப்பாளராக இருக்கிறார்.

அவருக்கு திப்னா கெதாவில் இருந்து கஞ்ச் பசோதாவுக்கு 2 நாள்களுக்கு முன்பு பணியிட மாற்றம் செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இது திப்னா கெதா மக்களுக்கு அதிர்ச்சியையும், வருத்தத்தையும் ஏற்படுத்தியது.

இதற்கிடையே யோகேந்திர பார்மர் மீது துறை ரீதியான விசாரணை முடிவடையாமல் இருந்ததால் அவரது பணியிட மாற்றம் உத்தரவு நிறுத்தி வைக்கப்பட்டது. இதனால் திப்னா கெதா கிராம மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

அதை மிகவும் பிரமாண்டமாகக் கொண்டாட அவர்கள் முடிவுசெய்தனர். இதையடுத்து பொலிஸ் நிலையத்தின் உள்ளேயும், வெளியேயும் மின் விளக்கு அலங்காரம் செய்யப்பட்டது. மேலும் பொலிஸ் நிலைய வாசலில் மிகப் பெரிய மேடை அமைத்து கடந்த 17ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) மாலை நடன நிகழ்ச்சி நடத்தினர். குழுவினருடன் சேர்ந்து கிராம மக்களும், பொலிஸாரும், பொலிஸ் அதிகாரியும் இந்தி படப் பாடல்களுக்கு ஏற்ப குத்தாட்டம் நடனம் ஆடி மகிழ்ந்தனர்.

இது குறித்து விதிஷா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் வினீத் கபூரிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டது. முடிவில் பொலிஸ் அதிகாரி யோகேந்திர பார்மர் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டார். மேலும் இங்கு பணிபுரிந்த 3 பொலிஸ் சார்ஜண்ட் மற்றும் பொலிஸார் பணியிட மாற்றம் செய்யப்பட்டனர். (உ)

# இலங்கையிலிருந்து கடத்தி வரப்பட்ட ஐந்தரைக் கிலோ தங்கம் சிக்கியது!

இராமேஸ்வரம்,நவ.21

இலங்கையில் இருந்து கடத்தி வரப்பட்ட இந்தியப் பணத்தில் ஒன்றரைக் கோடி ரூபா (இலங்கைப் பணத்தில் மூன்றரைக் கோடி ரூபா) மதிப்புள்ள ஐந்தரைக் கிலோ தங்கத்தை தமிழகப் பொலிஸார் பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக ஓர் இளைஞரைக் கைது செய்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இலங்கையில் இருந்து இராமேஸ்வரத்துக்குக் கடல் வழியாக அடிக்கடி போதை பொருள், தங்கம் உள்ளிட்ட பொருள்கள் கடத்தப்படுகின்றமை வழக்கமாக இருந்து வருகிறது. இங்கிருந்து இலங்கைக்கும், அங்கிருந்து இராமேஸ்வரத்துக்கும் கடத்தல் கும்பல் படகுகளில் பொருள்களைக் கடத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

இதனைக் கண்காணிக்க இந்தியக் கடலோரக் காவல் படை மற்றும் கியூ பிரிவு பொலிஸார் தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த நடவடிக்கையின் காரணமாக கடத்தல் சம்பவங்கள் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன.

## மண்டபம் பகுதியில் வைத்து கியூ பிரிவு மடக்கியது

இதனிடையே இலங்கையில் இருந்து மண்டபம் பகுதிக்கு தங்கக் கட்டிகள் கடத்தப்படுகின்றன என கியூ பிரிவு பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. இதையடுத்து பொலிஸார் மண்டபம் பகுதியில் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை மண்டபம் வடக்குக் கடற்கரைப் பகுதியில் பொலிஸார் ரோந்து சென்றபோது இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகு ஒன்று கரையில் தரித்து நின்றது. அதன் அருகே நின்றிருந்த இளைஞர் பொலிஸாரைக் கண்டதும் தப்பி ஓடினார். உடனே சுதாரித்துக் கொண்ட கியூ பிரிவு பொலிஸார் அவரைப் பின்தொடர்ந்து விரட்டிச் சென்று மடக்கிப் பிடித்தனர்.


விசாரணையில் அவர் கீழக்கரையை சேர்ந்த நசீர் என்பது தெரிய வந்தது. அந்த படகை சோதனை செய்தபோது அங்கிருந்த பையில் ஐந்தரைக் கிலோ எடையுள்ள தங்கக் கட்டிகள் இருந்தன. தங்க கட்டிகளையும், படகையும் பறிமுதல் செய்த பொலிஸார் நசீரை கைது செய்து விசாரணைக்காக மண்டபம் அழைத்துச் சென்றனர்.

பறிமுதல் செய்யப்பட்ட தங்க கட்டிகளின் மதிப்பு இந்தியப் பணத்தில் ஒன்றரைக் கோடி ரூபா ஆகும்.

பொலிஸார் நசீரிடம் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்தக் கடத்தல் சம்பவத்தில் வேறு சிலருக்கும் தொடர்பு இருக்கின்றமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

# பதவி விலக மறுத்து முகாபே பிடிவாதம்!

## ஸிம்பாப்வே இழுபறி தொடர்கிறது



ஹராரே,நவ.21

ஸிம்பாப்வே நாட்டு அதிபராக தொடர்ந்து பதவியில் தொடர்வேன் என்று தொலைக்காட்சியில் தோன்றிய அந்நாட்டு ஜனாதிபதி றொபர்ட் முகாபே பிடிவாதமாக அறிவித்தமையைத் தொடர்ந்து, அவர் பதவி விலக காலக்கெடு அளிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் நேரப்படி, நேற்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்குள் முகாபே தனது அதிபர் பதவியிலிருந்து விலக வேண்டும் என்று அவரின் சொந்தக் கட்சியான ஸானு பி.எவ். தெரிவித்துள்ளது.

முகாபே அவ்வாறு விலகவில்லை என்றால், பதவி விலகல் குறித்த விசாரணை அவர் மீது நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றம் கூடிய உடன் இந்த விசாரணை நடைபெறலாம்.

முன்னதாக, அதிபர் முகாபே, பதவி விலக வேண்டும் என வலுத்துவரும் கோரிக்கையை அவர் நிராகரித்திருந்தார். அடுத்த சில வாரங்களுக்குத் தொடர்ந்து தாம் பதவியில் இருப்பார் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

தொலைக்காட்சி நேரலையில் பேசிய அதிபர் முகாபே, டிசம்பர் மாதம் நடக்கவுள்ள நாடாளுமன்ற கூட்டத்தைத் தாமே தலைமையேற்று நடத்துவார் என்றும் தெரிவித்தார்.

அவரின் ஸானு பி.எவ். கட்சி, அவரைக் கட்சித்தலைவர் பதவியிலிருந்து நீக்கியதோடு, அதிபர் பதவியிலிருந்து விலக 24 மணிநேரத்திற்கு குறைவான கெடுவும் அளித்திருந்தது.

இரண்டு வாரங்களுக்கு முன்பு, தனக்கு அடுத்த பதவியில் இருந்த எமர்சன் மனங்காக்வாவை, முகாபே பதவி நீக்கம் செய்தமையைத் தொடர்ந்து இந்த நெருக்கடி உருவானது.

முகாபேவுக்குப் பிறகு அவரின் மனைவியை அதிபராக்கும் நடவடிக்கையாக இதை, இராணுவத் தலைவர் பார்த்தார்.

முகாபே பதவி விலகுகின்றமையை அறிவிப்பார் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட, தொலைக்காட்சி பேச்சைக் காண மக்கள் கூட்டம் ஹராரேயில் கூடியது.

பதவி விலகலுக்கு பதிலாக, அவர், ''கட்சியின் நாடாளுமன்ற கூட்டம் இன்னும் சில வாரங்களில் நடக்கவுள்ளது. அதற்கு நான் தலைமையேற்பேன்'' என்றார்.

ஸானு பி.எவ் கட்சி, இராணுவம் மற்றும் பொதுமக்கள் தெரிவித்த விமர்சனங்களை ஏற்றுக்கொண்ட அவர், நாடு மீண்டும் பழைய நிலைக்கு மாறவேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

''இராணுவத்தினரின் நடவடிக்கைகளில் என்ன சாதக பாதகங்கள் இருந்தாலும், அவர்களின் கவலைகளை, தலைமைத்தளபதி என்ற முறையில் நான் ஒப்புக்கொள்கிறேன்'' என்று அவர் தொலைக்காட்சியில் பேசினார்.

கடந்த வாரம், அரசுத் தொலைக்காட்சியை இராணுவம் தனது கட்டுப்பாட்டில் எடுத்த நகர்வை அவர் குறிப்பிட்டு இவ்வாறு தெரிவித்தார்.

முகாபே பதவி விலக ஒப்புக்கொண்டுவிட்டு, பிறகு தொலைக்காட்சியில் உரையாற்ற வந்த சமயம் தன் எண்ணத்தை மாற்றியிருக்கலாம் என்று இந்தச் சூழ்நிலையைத் தான் புரிந்து கொள்கின்றார் என பி.பி.ஸியின் ஆபிரிக்க சேவை ஆசிரியர் ஃபெர்கல் கேன் தெரிவிக்கிறார்.

(உ)

# உணவு வழங்கிய கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 15 பேர் சாவு

## மொரோக்கோவில் பரிதாபம்



மொரோக்கோவில் உணவு உதவி வழங்கப்படும் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சுமார் 15 பேர் பலியாகினர். மற்றும் பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.

ஈசௌரியா மாகாணத்தின் சிதி பௌளாலம் என்ற நகரத்தில் இந்தச்சம்பவம் நடைபெற்றது. அங்குள்ள தொண்டு நிறுவனம் ஒன்றால் இந்த உதவி வழங்கப்பட்டது.

சம்பவம் நடைபெற்ற இடத்தில், பெண்களின் சடலங்கள் சில தரையில் கிடக்கின்றமை போன்ற படங்கள் சமூக ஊடகங்களில் காணப்பட்டன.

வெறும் 8,000 மக்களை மட்டுமே கொண்டது சிதி பௌளாலம் நகரம்.

அங்குள்ள உள்ளூர் சந்தையில் இந்த வருடாந்திர உணவு உதவி வழங்கல் நடைபெற, அது வழக்கத்திற்கு மாறாக அதிக மக்கள் கூட்டத்தை கவர்ந்ததாக இச்சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் உள்ளூர் ஊடகங்களில் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டு ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு கூடியிருந்தனர் என ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்திடம் பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவர் கூறினார்.

மேலும் அவர் கூறுகையில்,''கூட்ட நெரிசலில் இருந்து தப்பிக்க ஒருவருக்கொருவர் தள்ளிக்கொண்ட மக்கள், தடைகளை உடைத்தெறிந்தனர். காயமடைந்த மக்கள் மராகேஷில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்'' என்றார்.

காயமடைந்தவர்களுக்கு அங்குள்ள உள்ளூர் அதிகாரிகளை உதவி செய்யுமாறு கேட்டுக்கொண்ட அந்நாட்டின் அரசர் ஆறாம். மமோஹமத், பாதிக்கப்பட்டவர்களின் மருத்துவச் செலவு மற்றும் இறுதிச் சடங்குகளுக்கான செலவை தாம் முழுமையாக ஏற்றுக்கொள்கிறார் எனக் கூறியுள்ளார் என மொரோக்கோவின் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் நடைபெறுவதற்கு முன், உணவு விநியோகத்திற்காக திறந்தவெளி சந்தையில் காத்திருந்த பெரும் கூட்டத்தை ஒரு பார்வையாளர் எடுத்த வீடியோ பதிவில் காண முடிந்தது. கூட்ட நெரிசலுக்கான காரணம் குறித்து தெளிவான தகவல்கள் தெரியவரவில்லை.

# மத்தியதரைக் கடலில் 286 அகதிகளை மடக்கியது அல்ஜீரியாவின் கடற்படை!



அல்ஜீயாஸ், நவ.21

மத்திய தரைக் கடல் வழியாக ஐரோப்பாவுக்குள் நுழைய முயன்ற 286 அகதிகளை அல்ஜீரியா கடற்படையினர் மடக்கிப் பிடித்துள்ளனர்.

வடஆபிரிக்க நாடுகளில் ஒன்றான லிபியாவில் கடந்த 2011ஆம் ஆண்டு முன்னாள் அதிபர் கடாபியின் ஆட்சி வீழ்த்தப்பட்ட பிறகு அங்கு அதிகாரப் போர் உச்சகட்டத்தை எட்டியுள்ளது.

பதவிவெறி பிடித்த போராளிக் குழுக்களின் மோதலில் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து தப்பித்து உயிரை பாதுகாத்துக்கொள்ள லிபியாவில் வறுமை நிலையில் வாடும் மக்களில் பலர் ஜேர்மனி, இத்தாலி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் புகலிடம் தேடிச் செல்கின்றனர்.

மேலும், உள்நாட்டுப் போரால் நிலைகுலைந்துள்ள ஈராக், சிரியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்தும், வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள ஆபிரிக்க நாடுகளில் இருந்தும் தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக செல்கின்றனர்.

பல்வேறு நாடுகளுக்கு கடல் கடந்து செல்லும் இந்த அகதிகள், ரப்பர் படகுகள் போன்றவற்றில் பாதுகாப்பற்ற முறையில் பயணம் செய்கின்றனர். இதனால் தொடர்ச்சியாக விபத்து ஏற்பட்டு வருகிறது.

இந்நிலையில், மத்திய தரைக் கடல் வழியாக ஐரோப்பாவுக்கு செல்ல முயன்ற அகதிகளை அல்ஜீரியா கடற்படையினர் மடக்கிப் பிடித்தனர்.

இதுதொடர்பாக அல்ஜீரியாவின் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் கூறுகையில், கடந்த வியாழக்கிழமை முதல் சனிக்கிழமை வரை மத்திய தரைக் கடலில் சோதனையில் ஈடுபட்டோம். அப்போது ஆவணங்கள் இன்றி ஐரோப்பாவுக்குள் நுழைய முயன்ற 286 பேரை மடக்கிப் பிடித்துள்ளோம். - எனத் தெரிவித்துள்ளனர்.

(உ)

## முதலாவது டெஸ்ட் முடிவு

# அருந்தப்பில் தப்பியது இலங்கை




இலங்கை – இந்திய அணிகளுக்கு இடையில் கொல்கத்தா ஈடன்கார்டன் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் ஆட்டம் பரபரப்பான நிலையில் நேற்று வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது.

இந்த ஆட்டத்தில் முதல் இன்னிங்ஸில் 122 ஓட்டங்களால் முன்னிலை பெற்ற இலங்கை அணி, இறுதிநாள், இறுதி வேளை ஆட்டத்தில், அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்து, சொதப்பி, தோல்வியின் எல்லையைத் தொட்டு, கடைசியில் ஒருவாறு சமாளித்து தப்பிப் பிழைத்து, ஆட்டத்தை வெற்றி தோல்வியின்றி முடித்து மீண்டுகொண்டது.

இந்த டெஸ்ட் ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை இந்தியாவைத் துடுப்பெடுத்தாட அழைத்தது. மழைக் குழப்பத்துக்கு நடுவே விளையாடிய இந்தியா 172 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது.

இலங்கை முதல் இன்னிங்ஸில் 294 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் 122 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது.

நேற்றுமுன்தினம் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இந்தியா அன்று ஆட்டம் முடிவுற்ற சமயம் ஒரு விக்கெட் இழப்புக்கு 171 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்றுக் கடைசி நாள் ஆட்டம் தொடங்கிய சமயத்திலேயே இந்திய விளாசத் தொடங்கியது. மதிய இடைவேளைக்குப் பின்னர் அணித் தலைவர் கோஹ்லி அடித்து ஆட ஓட்டங்கள் குவியத் தொடங்கின. தாம் நூறாவது ஓட்டத்தைப் பெற்ற போது – 8 விக்கெட் இழப்புக்கு இந்தியா 352 ஓட்டங்களைப் பெற்ற சமயம் – தமது அணியின் ஆட்டத்தை நிறுத்திய கோஹ்லி, இலங்கைக்கு வெற்றிக்கான ஓட்ட எண்ணிக்கையாக 231 என்ற இலக்கை நிர்ணயித்தார். ஆனால், தேநீர் இடைவேளைக்குப் பின்னர் இலங்கையின் விக்கெட்டுக்கள் சடசடவென சரிய அது தோல்வியில் கதவைத் தட்டும் நிலையை எட்டியது.

இலங்கையின் ஓட்ட எண்ணிக்கை 7 விக்கெட் இழப்புக்கு 75 என்ற கணக்கில் தடுமாற, போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் சற்று முற்கூட்டியே நிறுத்தப்பட, இலங்கை தோல்வியின் விளிம்பில் இருந்து தப்பிப் பிழைத்தது. ஆட்டம் வெற்றி தோல்வி இன்றி முடிவுற்றது.

**ஓட்ட விவரம்**

★இந்தியா:- 172 மற்றும் 8 விக்கெட் இழப்புக்கு 352

★இலங்கை 294 மற்றும் 8 விக்கெட் இழப்புக்கு 75

## இந்தியாவுடனான ஒருநாள் போட்டி ஆட்டம் தொடங்கும் நேரம் மாற்றம்



புதுடில்லி, நவ.21

தற்போதைய டெஸ்ட் தொடர் முடிந்ததும் இந்திய அணி இலங்கைக்கு எதிராக 3 ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுகிறது.

இதில் தர்மசாலா (டிசெ.10), மொகாலி (டிசெ.13) ஆகிய இடங்களில் நடக்க உள்ள முதல் இரு நாள் போட்டிகள் தொடங்கும் நேரத்தை இந்திய கிரிக்கெட் சபை மாற்றியுள்ளது. இங்கு பிற்பகல் 1.30 மணிக்கு போட்டி தொடங்குவதாக இருந்தது. ஆனால் அங்கு அந்த சமயம் கடும் குளிருடன் பனிப்பொழிவும் அதிகமாக இருக்கும் என்று சம்பந்தப்பட்ட மாநில கிரிக்கெட் சங்கங்கள் கூறியமையால் இவ்விரு இடங்களிலும் ஆட்டம் முற்பகல் 11.30 மணிக்கு தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

3ஆவது ஒரு நாள் போட்டி டிசெம்பர் 17 ஆம் திகதி விசாகப்பட்டினத்தில் திட்டமிட்ட நேரத்தில் தொடங்கி (பிற்பகல் 1.30 மணி) நடைபெறும், அதில் மாற்றம் இல்லை என்றும் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டு இருக்கிறது

# இலங்கையின் 10 விக்கெட்டுகளையும் வேகப் பந்து வீச்சாளர்களே வீழ்த்தினர்




### முதல் இன்னிங்ஸில் இந்தியா சாதனை




கொல்கத்தா,நவ.21

இலங்கை – இந்திய அணிகள் இடையிலான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஒரே இன்னிங்ஸில் 10 விக்கெட்டுகளையும் இந்திய வேகப் பந்து வீச்சாளர்களே வீழ்த்தி சாதனை படைத்துள்ளனர்.

இந்தியா – இலங்கை அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கொல்கத்தா ஈடன்கார்டன் மைதானத்தில் நடந்து வருகிறது.

முதல் இரு நாள்களில் மழையால் கணிசமான ஓவர்கள் இழப்பு ஏற்பட்ட நிலையில், அதற்கு மத்தியில் துடுப்பெடுத்தாடிய இந்தியா முதல் இன்னிங்ஸில் 172 ஓட்டங்களில் சுருண்டது.

பின்னர் தனது முதல் இன்னிங்ஸை ஆடிய இலங்கை மூன்றாவது, நான்காவது நாள் ஆட்டங்களில் ஆட்டமிழந்தது. முதல் இன்னிங்ஸில் இலங்கையின் 10 விக்கெட்டுகளையும் இந்திய வேகப் பந்து வீச்சாளர்களே சாய்த்தனர்.

முகமது ஷமி, புவனேஷ் வர்குமார் தலா 4 விக்கெட்டுகளும், உமேஷ் யாதவ் 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். இந்திய சுழற்பந்து வீச்சாளர்கள் அஸ்வின், ரவீந்திர ஜடேஜாவுக்கு ஒரு விக்கெட்டும் கிடைக்கவில்லை.

சொந்த மண்ணில் ஓர் இன்னிங்ஸில் எதிரணியின் 10 விக்கெட்டுகளையும் இந்திய வேகப்பந்து வீச்சாளர்களே வீழ்த்துகின்றமை இது மூன்றாவது நிகழ்வாகும்.

இதற்கு முன்பு 1982ஆம் ஆண்டு மும்பையில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டிலும், 1983ஆம் ஆண்டு ஆமதாபாத்தில் நடந்த மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்டிலும் இந்திய வேகப்பந்து வீச்சாளர்கள் இத்தகைய சாதனையைப் படைத்துள்ளனர்.

மேலும், உள்ளூரில் ஒரே இன்னிங்ஸில் 3 இந்திய வேகப்பந்து வீச்சாளர்கள் குறைந்தது 2 அல்லது அதற்கு மேல் விக்கெட்டுகளை வீழ்த்துகின்றமை 1986ஆம் ஆண்டுக்குப் பிறகு இதுவே முதல் முறையாகும்.




# லலித் மலிங்கவை கழற்றி விடுவதற்கு மும்பை அணி முடிவு

இந்தியாவில் நடைபெற்று வரும் ஐ.பி.எல். தொடரில் பங்கு பற்றி விளையாடி வரும் மும்பை அணி, இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கவை கழற்றி விட முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவில் ஆண்டுதோறும் ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. அடுத்தாண்டு ஐ.பி.எல். தொடர் தனது பத்தாவது ஆண்டைக் கொண்டாடவுள்ளது.

இதற்கிடையில் அணியில் இருக்கும் வீரர்களில் மூன்று வீரர்களை மட்டும் வைத்துக் கொண்டு மற்ற வீரர்கள் அனைவரையும் ஏலத்திற்கு விட்டுவிட வேண்டும்.

அந்த வகையில், சூதாட்டச் சர்ச்சையில் சிக்கி அடுத்தாண்டு திரும்பும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் டோனி, அஸ்வின் மற்றும் ரெய்னாவைத் தக்க வைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் எனச் செய்திகள் வெளியாகின.

இந்நிலையில், மும்பை அணி பும்ரா, ரோகித் மற்றும் நியூஸிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் மேக்லானகனை வைத்துவிட்டு, மற்ற வீரர்கள் அனைவரையும் ஏலத்தில் விட முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

மும்பை அணியில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வந்த இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் மலிங்கவையும் கழற்றி விட முடிவு செய்துள்ளது.

ஐ.பி.எல். தொடரில் 'வன்மேன் கிங்'காக இருக்கும் மலிங்க 110 போட்டிகள் விளையாடி 154 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.




ஆனால், சமீபத்தில் முடிந்த ஐ.பி.எல். தொடரில் மலிங்கவின் தாக்கம் அந்த அளவிற்கு இல்லை, 12 போட்டிகள் விளையாடிய அவர் 11 விக்கெட்டுகள் மட்டுமே வீழ்த்தினார். ஓவருக்கு 8.84 ஓட்டங்கள் வீதம் கொடுத்துள்ளார்.

'யோர்க்கர் ஸ்பெலிஸ்ட்' ஆன மலிங்கவின் இடத்தைப் பூர்த்தி செய்ய மும்பை அணிக்கு பும்ரா உள்ளார். அவர் ரி20 போட்டிகளில் கடைசிக் கட்டத்தில் யோர்க்கர்கள் வீசி அசத்தி வருகிறார்.

இதனால் பும்ரா இருக்க மலிங்க ஏன் என்ற நினைப்பிலும் மும்பை உள்ளதாகவும், ஆனால் அணியின் தலைவர் ரோகித் சர்மா இவ்விடயத்தில் குழப்பத்தில் உள்ளார் எனவும் கூறப்படுகிறது.

அதுமட்டுமின்றி, உடற்தகுதியிலும் மலிங்கவின் செயற்பாடு திருப்திகரமாக இல்லை. இதன் காரணமாகவே அவர் இலங்கை அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்டு வருகின்றார் எனவும் கூறப்படுகிறது.

# ஆஸி. கிரிக்கெட் வீரர்களுக்கு வேக ஓட்டப் பயிற்சி

## அதிவேக ஓட்டவீரர் உசைன் போல்ட் வழங்குகிறார்





ஆஷஸ் தொடரில் விக்கெட்டுகளுக்கு இடையே வேகமாக ஓடி ஓட்டங்கள் குவிப்பதற்காக ஆஸ்திரேலிய வீரர்களுக்கு பிரபல குறுந்தூரஓட்டவீரர்உசைன் போல்ட் பயிற்சி அளித்தார்.

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் கிரிக்கெட் தொடர் நாளை மறுதினம் வியாழக்கிழமை (நவம்பர் 23 ஆம் திகதி) பிரிஸ்பேனில் ஆரம்பமாகிறது. பாரம்பரிய முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தொடரை எப்படியாவது கைப்பற்ற வேண்டும் என ஆஸ்திரேலியா திட்டமிட்டுள்ளது.

இதற்குக் காரணம் கடந்த முறை ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற ஆஷஸ் தொடரை ஆஸ்திரேலியா 5-0 எனக் கைப்பற்றி இங்கிலாந்தை வெள்ளையடித்திருந்தது. மிட்செல் ஜோன்சன் தனது வேகப்பந்து வீச்சால் இங்கிலாந்தை துவம்சம் செய்துவிட்டார். அதேபோல் தற்போதும் இங்கிலாந்தை வெள்ளையடிக்க ஆஸ்திரேலியா விரும்புகிறது.

ஆனால், தற்போதைய இங்கிலாந்து அணி பலம் வாய்ந்ததாக இருக்கிறது. அதேநிலையில் ஆஸ்திரேலியாவின் துடுப்பாட்டம் பலம் வாய்ந்ததாக இருக்கிறதா என்பது சந்தேகமே.

இதனால் ஒவ்வொரு துறையிலும் சிறப்பாக செயற்பட வேண்டும் என்று ஆஸ்திரேலியா விரும்புகிறது. ஆஸ்திரேலிய வீரர்கள் கிடைக்கும் வாய்ப்புகளை அதிகம் பயன்படுத்தி விக்கெட்டுக்களுக்கு இடையில் விரைவாக ஓடி ஓட்டங்கள் குவிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

ஆனால் ஆஸ்திரேலிய வீரர்கள் விக்கெட்டுகளுக்கு இடையில் விரைவாக ஓடி ஓட்டங்கள் எடுப்பதில் அவ்வளவு சிறப்பாகச் செயற்படுவதில்லை. இதனால் உலகின் அதிவேக ஓட்டப்பந்தய வீரரான உசைன் போல்டிடம் விரைவாக எப்படி ஓடுவது என்பது குறித்து பயிற்சி எடுத்தனர்.

உசைன் போல்டும் ஆரம்பத்திலேயே அதி விரைவாக ஓடுவது எப்படி என்பது குறித்து ஆலோசனைகளை ஆஸ்திரேலிய வீரர்களுக்குப் பயிற்சி வழங்கினார்.

ஆஸ்திரேலிய வீரர்களுக்கு பயிற்சி அளித்தமை தொடர்பாக உசைன் போல்ட் கூறுகையில் -

"கிரிக்கெட் போட்டியில் நான் பார்த்த ஒரு விடயம், அவர்கள் மிக வும் வேகமாக ஓடுவதில்லை. ஆஸ்திரேலிய வீரர்கள் ஓட்டத்தை தொடங்குவதில் மிகவும் குறைவான போக்கில்தான் உள்ளனர்.

"சரியான பயிற்சி அவர்களுக்கு உதவியாக இருக்கும்" - என்றார்.



# டெஸ்டில் தொடர்ந்து 5 நாள் விளையாடி புஜாரா சாதனை



கொல்கத்தா, நவ.21

இலங்கைக்கு எதிராக நடந்து வரும் டெஸ்ட் போட்டியில் 5 நாள்களும் விளையாடி புஜாரா புதிய சாதனை படைத்துள்ளார்.

கொல்கத்தாவில் உள்ள ஈடன் மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை முதல் இலங்கைக்கு எதிராக டெஸ்ட் போட்டியில் இந்தியா விளையாடி வந்தது. டெஸ்ட் போட்டியில் முதல் முறையாக புஜாரா விளையாட வந்தார்.

நேற்று 5ஆவது நாளாகத் தொடர்ந்து விளையாடினார் அவர். ஏற்கெனவே இருந்த சாதனையை முறியடித்தார். டெஸ்ட் போட்டிகளில் தொடர்ந்து விளையாடிய வீரர்களின் பட்டியலில் உலக அளவில் 8 ஆவது இடத்தையும், இந்திய அளவில் 3 ஆவது இடத்தையும் அவர் பிடித்துள்ளார்.

நடுவே, இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸை ஆடியபோதிலும், நாள் கணக்கை வைத்துப் பார்த்தால் புஜாரா 5 நாள்கள் ஆடினார் எனக் கணக்கு வந்துள்ளது.

புஜாராவுக்கு முன்னர் இந்தச் சாதனையை படைத்த இரு இந்திய வீரர்கள் எம்.எல்.ஜெய்சிம்ஹா மற்றும் தற்போதைய இந்திய அணியின் பயிற்றுநர் ரவி சாஸ்திரி.

1960 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் எம்.எல். ஜெய்சிம்ஹாவும், 1984 ஆம் ஆண்டு இங்கிலாந்து தொடருக்கு எதிராக விளையாடிய ரவி சாஸ்திரியும் இப்போது புஜாராவும் இச்சாதனையை எட்டியுள்ளனர். இந்த மூன்று இந்திய வீரர்களும் கொல்கத்தா ஈடன் மைதானத்தில் விளையாடி இந்த சாதனையை பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலக அளவில் டெஸ்ட் போட்டியில் தொடர்ந்து விளையாடி சாதனை படைத்தோரின் பட்டியல்:-

1. எம்.எல். ஜெய்சிம்ஹா (இந்தியா)
2. ஜியாஃப்ரே போய்கொட் (இங்கிலாந்து)
3. கிம் யூகேஸ் (ஆஸ்திரேலியா)
4. ஆலம் லாம்ப் (இங்கிலாந்து)
5. ரவி சாஸ்திரி (இந்தியா)
6. ஆட்ரியன் கிரிஃப்த் (மேற்கிந்திய தீவுகள்)
7. ஆண்ட்ரூ ஃபிளின்ட்டாப் (இங்கிலாந்து)
8. சேதேஸ்வர் புஜாரா (இந்தியா)

## கைதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு நேற்று நாடாளு மன்றத்தில் நீதி அமைச்சரைப் பார்த்துக் கோரிக்கை விடுத்தார் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன்.

ஜனாதிபதியைக் கொலை செய்ய முயற்சித்த நபருக்கு பொதுமன்னிப்பு வழங்க முடியுமென்றால் பாரதூரத் தன்மையில் அதைவிடக் குறைவான குற்றங்களை இழைத்த தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஏன் பொதுமன்னிப்பு வழங்க முடியாது என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நீதி அமைச்சின் மீதான வரவு – செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றும் போதே இரா.சம்பந்தன் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப் பட்டுள்ள தமிழ் அரசியல் கைதி களில் சிலருக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதுடன்மேலும் சிலர் மீது இன்னும் குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்படாமலும் இன்னுமொருபகுதியினர் மீது குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டு அவர்கள் தொடர்பானவழக்குகள்நிலுவையிலும் இருக்கின்றன.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியுடனும் அதேபோல் பிரதமருடனும் பேசியிருக் கிறேன். இந்த விவகாரம் பற்றி அவர்களுடன்பேசியபோது அவர்களது நிலைபாடுகள் நியாயமாக இருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

தற்போது புதிய நீதி அமைச்சர் இருக்கிறார். இவ்வாறான நிலையில், அவருடன் இந்தப் பிரச்சினையை நியாய பூர்வமான வகையில் தீர்த்துக் கொள்வதற்கு நாம் எதிர்பார்க்கிறோம். இதற்காக முன்னாள் நீதி அமைச்சரவை நான் குறை கூறவில்லை.

அவர் எம்முடன் முரண்பட்டிருக்கவில்லை. எனினும், அவரினால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, அனைத்து விடயங்களுமே அப்படியே தொடர்ந்ததுடன், ஆகையால் எதுவும் நடந்திருக்கவில்லை.

இது நபர்கள் அரசியல் காரணங்களுக்காகச் செய்யப் பட்ட சில குற்றங்கள் பற்றியதாகவே இந்த விடயம் காணப் படுகிறது. அந்த வகையில், இது அரசியல் காரணங்களுக்காகச் செய்யப்பட்டகுற்றங்களேதவிர சுயலாபத்துக்காகச் செய்யப்பட்டவை கிடையாது.

அரசியல் காரணங்களுக் கான குற்றங்களைப் பொறுத்த வரையில் அவ்வாறான நபர்களுக்குப் பொதுமன்னிப் பளிக்க முடியும் என்றும், அவர் களை விடுதலை செய்ய முடியு மென்றும் அரசியல் ரீதியான தீர்மானங்கள் இதற்கு முன்னர் இந்த நாட்டில் எடுக்கப்பட்டுள் ளன. இதை நான் இந்தச் சபையில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் சுட்டிக்காட்டியுள்ளேன்.

1971, 1987, 1988 மற்றும் 1989 ஆம் ஆண்டுகளின் இடம்பெற்ற கிளர்ச்சிகளின் போதுஅரசியல்காரணங்களுக் காகக் குற்றமிழைத்த பெரும் எண்ணிக்கையிலானோர் பின்னர் பொதுமன்னிப்பு அளிக் கப்பட்டு விடுதலை செய்யப்பட் டுள்ளனர். ஆகவே, அதை ஏன் தற்போது மீண்டும் செய்ய முடியாது என்ற கேள்வியை நான் ஏற்கனவே முன் வைத்திருந்ததுடன், மீண்டும்அதே கேள் வியைஇங்குமுன்வைக்கிறேன்.

யாரேனும் அரசியல் காரணங்களுக்காக அன்றி தனிப் பட்ட அல்லது வேறு காரணங் களுக்காகக் குற்றமிழைத்திருந்தால் இதை நான் கேட்க மாட்டேன்.எனினும்,இந்தநபர்கள் அரசியல் காரணங் களுக்கான குற்றங்களை இழைத்தனர் என்பதில் உங்களுக்க உடன்பாடு இருப்பின், கடந்த காலங் களில் இவ்வாறான விடயங்கள் கையாளப்பட்ட விதத்திலேயே இவர்களும் நடத்தப்பட வேண்டும்.

அத்துடன், இந்த நபர்கள் அனைவரும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழேயே கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக் கப்பட்டுள்ளனர். எனினும், இந் தச்சட்டத்தைரத்துச்செய்வதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு உங்களது அரசு பல்வேறு சந்தர்ப்பங் களிலும் உறுதியளித்திருக்கி றது. அத்துடன், பயங்கர வாதத் தடை சட்டத்திற்குப் பதிலாகக் கொண்டு வரப்படுவதற்கான சட்டமொன்றையும் தயாரித்து வருகிறீர்கள். ஆகவே, இந்தச் சட்டத்தைநீங்கள்ரத்துச்செய்ய செயற்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில் அதே சட்டத்தின் கீழ் நபர்கள் தடுத்து வைக்கப்பட் டிருப்பதை நீங்கள் எப்படி நியாயப்படுத்துவீர்கள்?

தம்மைப்படுகொலைசெய்ய முயற்சித்திருந்த நபருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கினார். ஏனெனில், தனிப்பட்ட காரணங்களுக்காக அன்றி அரசியல் காரணங்க ளுக்காகவே அவர் கொலை முயற்சியை மேற்கொண் டிருந்தார் என்று ஜனாதிபதி நம்பச் செய்யப்பட்டிருந்தார். ஜனாதிபதியைக் கொலை செய்ய முயற்சித்த நபருக்குப் பொதுமன்னிப்பு வழங்க முடியுமென்றால் பாரதூரத் தன் மையில் அதைவிடக் குறை வான குற்றங்களை இழைத்த நபர்களுக்கு ஏன் பொது மன் னிப்பு வழங்க முடியாது?

இதுதான் நாம் சிந்திக்க வேண்டிய விடயங்கள். துரதிரஷ்டவசமாக முன்னைய நீதி அமைச்சர் இது தொடர்பில் போதிய கவனம் செலுத்தியிருக்கவில்லை. ஆகவே, ஜனாதிபதியுடனான கொரிய விஜயத்தை முடித்து நாடு திரும் பியதும் சட்டமா அதிபர், சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் அதிகாரிகள் மற்றும் அழைக் கப்பட வேண்டிய ஏனைய நபர்களை அழைத்துக் கூட்ட மொன்றை கூட்டுங்கள். நாம் இந்தவிடயம்பற்றிக்கலந்துரை யாடுவோம். நாம்இதற்கானசில ஏற்பாடுகளைச் செய்துகொள் வோம்.

ஏனெனில், இந்தக்கைதிகள் தொடர்பில் வடக்கிலும் அதே போல் கிழக்கிலும் பல்வேறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் உண்ணாவிரதப் போராட்டங்களும் இடம்பெறுகின்றன.

இதேநேரம், இந்த விடயம் பற்றி கலந்துரையாட யாழ்ப் பாணம் வருமாறு யாழ். பல் கலைக்கழக மாணவர்களிடமி ருந்து எனக்கு கடிதமொன்று கிடைத்துள்ளது. கொழும்பில் மிக முக்கியமான ஏனைய பொறுப்புகள் இருப்பதால் எனக்கு யாழ்ப்பாணம் செல்ல முடியாமலுள்ளது. எவ்வாறி ருப்பினும், மாணவர்களின் உணர்வுகளை நான் புரிந்து கொள்கிறேன். அரசியல் குற்றங்களுக்காக முன்னர் குற்றஞ்சாட்டப்பட்டி ருந்த நபர்கள் கடந்த காலங் களில் விடுதலை செய்யப்பட் டிருந்த நிலையில், இவர்கள் மட்டும் எதற்காகத் தடுத்து வைக் கப்பட்டுள்ளனர் என்பது அவர் களது கேள்வியாக இருக்கிறது. ஆகவே, இந்த விடயம் முடிவுக் குக்கொண்டுவரப்படவேண்டும். அத்துடன், வவுனியாவில் இருந்து அநுராதபுரத்துக்கு மாற்றம் செய்யப்பட்ட 3 வழக்குகள் தொடர்பில் நான் ஏற்கனவே இந்தச் சபையில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை யொன்றைக் கொண்டு வந்து பேசியிருக் கிறேன்.

நீங்கள் (நீதி அமைச்சர்) அந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டில் இருந்திருக்கவில்லை. நீங்கள் நாடு திரும்பியதும் சந்திப் பொன்று நடைபெற்று இந்த விடயம் தீர்க்கப்படும் என்று அப்போது உறுதியளிக்கப்பட்டி ருந்தபோதிலும் அந்த விடயம் இன்னும் தீர்க்கப்பட்டிருக்க வில்லை.

இந்த நாட்டில் இன ரீதியான பதற்றத்தை ஊக்குவிக்க முயற்சிக்கும் நபர்கள் இந்த விடயங்களில் சரியானது நடைபெற்றுவிடுவதை தடுக்கச் செயற்படுகின்றனர். கைதிகள் விடுதலைசெய்யப்பட்டால்நாடு பிளவுபடும் என்று சொல் பவர்கள் இருக்கின்றனர். இவ் வாறு அபத்தமாகப் பேசுபவர்களும் இருக்கின்றனர். இந்த மக்கள் எந்நேரமும் அச்சுறுத் திக் கொண்டிருக்க நாம் இட மளிக்க முடியாது. சில சந் தர்ப்பங்களில் நாம் சரியான தைச் செய்ய வேண்டும்.

உங்களது இந்த அரசு சுமார் 3 வருடங்களாக ஆட்சியில் இருக்கும் நிலையில், இந்த விடயமும் 3 வருடங்களாக நிலுவையில் இருக்கிறது. ஆகவே வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பியதும் கூட்டமொன்றை ஏற்பாடு செய்யுமாறு நான் நீதி அமைச்சரை கேட்கிறேன்.

நாம் ஜனாதிபதி, பிரதமர், சட்ட மா அதிபர் கலந்துரையாடுவோம். அமைச்சரும் பிரசன்னமாகியிருப்பார். நாம் முடிவொன்றுக்கு வருவோம். இந்த விடயம் இழுபட்டுச் செல்வதற்கு நாம் இடமளிக்கக் கூடாது. அது நாட்டுக்கும், நல் லிணக்கத்துக்கும் அதேபோல் ஒற்றுமைக்கும் நல்லதல்ல.

தாங்கள் வேற்றுமையுடன் உபசரிக்கப்பட்டதாக இந்த இளைஞர்கள் நினைக்க இடம ளித்துவிடக்கூடாது. ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து விட்டன. விடுதலைப் புலிகளும் கிடையாது. எமக்கு வன்முறை தேவையில்லை. ஐக்கிய – பிளவுபடாத அதேபோல் பிரிக் கப்பட முடியாத இலங்கை கட்டமைப்பிலானதீர்வொன்றே எமக்குத் தேவை. இவ்வாறான நிலையில் நாம் மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தி இந்த விடயங்களைச் சுமுக மாகத் தீர்த்துக்கொள்ள வேண் டும் – என்றார்.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பில் அமெரிக்காவின் நிதியுதவியுடன் அமைக் கப்பட்ட பாடசாலைத் திறப்பு விழாவில்உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பொருளாதாரத்தைமீளமைக் கவும், நல்லாட்சி சட்டத்தின் ஆட்சியை முன்னகர்த்தவும், அனைவருக்கும் சம உரிமை, மனித உரிமைகள் மற்றும் சம வாய்ப்புகளை உறுதிப்படுத் தவும், இலங்கை அரசுடன் அமெரிக்கா தோளோடு தோள் துணை நிற்கும்.

அமெரிக்காவின் இந்த ஒத்துழைப்பு இலங்கையின் நல்லிணக்கம்மற்றும்ஒருமைத் துவத்துக்கான உதவியின் ஓர் அங்கமாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## சாதாரண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்முறைஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு 6இலட்சத்து 88 ஆயிரத்து 573 பரீட்சார்த்தி கள் தோற்றவுள்ளனர் எனப் பரீட்சைகள் திணைக்களம் மேலும் கூறியுள்ளது.

இந்தப் பரீட்சையை நாடு முழுவதும் உள்ள 5ஆயிரத்து 116 பரீட்சை நிலையங்களில் நடத்துவதற்குஏற்பாடுகள்செய் யப்பட்டுள்ளன.

## வாள்வெட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புடையோரைக் கைது செய் வதற்கும் விசேட அதிரடிப் படை யினர் ரோந்து நடவடிக் கையில் ஈடுபட்டவுள்ளனர்.

வாள்வெட்டில் ஈடுப டுவோர் தொடர்பில் தகவல்களை வழங்க விரைவில் அவசர தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.

இவ்வாறு விசேட அதிரடிப் படையின் வடக்கு மாகாணக் கட்டளை அதிகாரி நேற்றுத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம்பண்ணையில் அமைந்துள்ள விசேட அதிரடிப் படை முகாமில் நேற்று நடை பெற்ற ஊடகவியலாளர் சந் திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரி வித்தவை வருமாறு:–

அண்மைக் காலமாக யாழ். மாவட்டத்தில் வாள்வெட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விசேட அதிரடிப் படை யினர் ரோந்து நடவடிக்கை யில் ஈடுபடவுள்ளனர். வாள் மற் றும் கூரிய ஆயுதங்களுடன் சந்தேகத்துக்கு இடமானமுறை யில் நடமாடுபவர்களைக் கைது செய்வதற்கான நடவ டிக்கைகள் முன்னெடுக் கப்படும்.

குறிப்பிட்ட சிலரே இவ்வா றான வாள்வெட்டுச் சம்ப வங்களைச் செய்கின்றார்கள். இவ்வாறானர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பொது மக் களின் ஒத்துழைப்பு அவசி யம்.

சட்டவிரோதச் செயற்பாடு களில் ஈடுபடுபவர்கள் தொடர் பில் தெரிந்தால், யாழ்ப்பாணம் பண்ணையில் உள்ள விசேட அதிரடிப் படை முகாமுக்கு அறி யத் தரமுடியும்.

இவ்வாறான தகவல்களை அறிவிப்பதற்கு அவசர அழைப்பு இலக்கம் ஒன்றை மிக விரைவில் அறிவிப்போம் – என்றார்.

## பிணைமுறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், எதிர்வரும் டிசெம்பர் மாதம் 8ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும் என்று ஆணைக் குழு நேற்று அறிவித்தது.

2015 பெப்ரவரி முதலாம் திகதி முதல் 2016 மார்ச் 31ஆம் திகதி வரையான காலப் பகுதி யில் மத்திய வங்கியின் பிணை முறி விநியோகம் தொடர்பில் விசாரணை செய்வதற்காக உயர்நீதிமன்ற நீதியரசர் கே.டி.சித்ரசிறியின் தலைமை யில் நீதியரசர் பிரசன்ன ஜயவர்தனமற்றும்ஓய்வுபெற்ற பிரதிக் கணக்காய்வாளர் நாயகம் வேலுப்பிள்ளை கந்தசாமி ஆகியோர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டனர்.

தொடர்ச்சியாகக் கடந்த 9 மாதங்கள் சாட்சி விசாரணை களை முன்னெடுத்த பிணை முறி மோசடி தொடர்பில் விசா ரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு, தனது சாட்சி விசாரணைகளைக் கடந்த ஒக்ரோபர் 17 ஆம் திகதியுடன் நிறைவுக்குக்கொண்டுவந்தது. எனினும், அவசியம் ஏற்படு மாயின் பிரதமர் ரணில் விக்ரம சிங்க உள்ளிட்ட சாட்சியாளர் களை நேரடியாக விசாரணை செய்ய ஆணைக்குழுவுக்கு அழைப்போம் என அன்றைய தினம் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் நீதியரசர் கே.டி.சித்ரசிரி அறி வித்திருந்தார். இதனடிப் படையில் நேற்றுப் பிரதமரிடம் விசாரணை முன்னெடுக்கப் பட்டது.

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கூட்டமைப்பு அறி வித்துள்ளது.

முதலாவது கூட்டம் திரு கோணமலை நகர மண்டபத் தில் எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில், கல்முனை நீதிமன்ற வீதியில் அமைந்துள்ளநால்வர்கோட்டம் மண்டபத்தில்எதிர்வரும்25ஆம் திகதி காலை 9 மணிக்கு இரண் டாவது கூட்டம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

மூன்றாவது கூட்டம், மட்டக் களப்பு மாவட்டத்தில், தாண்ட வன்வெளி பெர்டினன்ஸ் மண் டபத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

இந்தக் கூட்டங்களில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலை வரும், எதிர்க்கட்சித் தலைவரு மாகிய இரா.சம்பந்தன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடா ளுமன்ற உறுப்பினரும், ஊட கப்பேச்சாளருமானஎம்.ஏ.சுமந் திரன் ஆகியோர் கலந்து கொண்டுஇடைக்காலஅறிக்கை பற்றிய தெளிவூட்டல்களை வழங்கவுள்ளனர்.

## கோப்பாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டது.ஆயினும்பொலிஸார் உடனடியாகஅங்குவரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

வன்னியில் இருந்து ஏற்றி வரப்பட்ட கிரவல் மண்ணுடன் இந்த வெடிகுண்டுகள் வந்தி ருக்கலாம் எனச் சந்தேகிக் கப்படுகின்றது.

இது தொடர்பில் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்ததை வருமாறு:

வன்னியிலிருந்து எடுத்து வரப்பட்ட கிரவல் மண் கோப் பாய் ஆசிரியர் கலாசாலைக்கு முன்பாகப் பறிக்கப்பட்டுள்ளது. அந்தக் கிரவல் மண்ணுடன் 4 வெடிகுண்டுகளும் புதைந்து கிடந்து வந்துள்ளன.

அவை தொடர்பில் கிராம அலுவலருக்கு அறிவிக்கப்பட் டது. அவர் மாலை 3 மணி யளவில் கோப்பாய் பொலி ஸாருக்கும் 119 என்ற பொலிஸ் அவசர சேவைக்கும் அறிவித் தார். சுமார் 4 மணித்தியாலங் கள் கடந்தும் பொலிஸார் சம் பவ இடத்துக்கு வரவில்லை– என்றார்.

## உடைகிறது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித் தார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:–

வடக்கு மாகாண சபை யின் முல்லைத்தீவு மாவட்ட உறுப் பினர் து.ரவிகரன் கடந்த ஞாயிற்றுக்கிழமைதமிழ்அரசுக் கட்சியில் இணைந்துள்ளார்.

வவுனியா மாவட்ட உறுப் பினர்கள் எம்.தியாகராசா, ஆர்.இந்திரராசா ஆகியோரும் விரைவில் இணையவுள்ளனர். அதே வேளை, மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த முன் னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஒருவரும் தமிழ் அரசுக் கட்சியில் இணையவுள் ளார் – என்றார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் இணைந்து, புதிய முன்ன ணியாகச் செயற்படவுள்ளதாக அறிவித்திருக்கும் நிலையில், இந்தக் கட்சித் தாவல் பற்றிய செய்தி வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாலியல் சுகாதார மருத்துவம் தொடர்பிலான மூன்றாவது மாநாடு இலங்கையில் ஆரம்பம்!






கொழும்பு, நவ. 21

பாலியல் சுகாதார மருத்துவம் பற்றிய தெற்காசிய நாடுகளின் மருத்துவ சங்கத்தின் மூன்றாவது மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை இடம்பெறும் இம்மாநாடு இந்த முறை இலங்கை கயில் நடைபெற்றது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் 'உடல், உள மற்றும் அறிவியல் ரீதியில் பாலியல் மருத்துவத்தின் புதிய எல்லைகள்' எனும் தொனிப் பொருளில் இடம்பெற்றது.

இன்று வரை இடம்பெறும் இந்த மாநாட்டில் தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த பாலியல் சுகாதார மருத்துவம் பற்றிய விசேட நிபுணர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரைய ாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொள்கின்றனர்.

பாலியல் சுகாதாரத்துடன் தொடர்புடைய புதிய மருத்துவ முறைகள் பற்றிய விரிவுரைகள் இந்த மாநாட்டில் இடம் பெறவுள்ளதுடன், பாலியல் சுகாதாரம் சம்பந்தமான மருந்துகளின் அண்மைக்கால முன்னேற்றம் மற்றும் எதிர்கால வழிகாட்டுதல்கள் தொடர்பாகவும் கருத்துக்கள் முன் வைக்கப்படவுள்ளன. இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இதற்கு முன்னர் இந்த மாநாடு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாலியல் சுகாதார மருத்துவம் பற்றிய தெற்காசிய நாடுகளின் மருத்துவ சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் மூவருக்கு ஜனாதிபதி இதன்போது விருது வழங்கினார்.

இந்த நிகழ்வில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, பாலியல் சுகாதார மருத்துவம் பற்றிய தெற்காசிய நாடுகளின் மருத்துவ சங்கத்தின் தலைவர் மருத்துவர் லசந்த மளவிகே, சர்வதேச மருத்துவ சங்கத்தின் தலைவர் மற்றும் மருத்துவர் இயந்தி அபேவிக்ரம உள்ளிட்ட அதிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## நாட்டின் இறைமைக்கு உடன்பட்டதாக அனைவரும் செயற்பட வேண்டும்!

### அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 21



இனவாதிகள், கடும்போக் காளர்கள் மற்றும் பிரிவினை வாதிகளிடம் நாட்டை ஒப்படைப்பதற்கு அரசு தயாரில்லை என்று தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்று கையிலேயே அவர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் இறைமைக்கும், அரசமைப்புக்கும் உடன்பட்டதாக அனைவரும் செயற்பட வேண்டும்.

வட மாகாண அமைச்சர் ஒருவர் தேசிய கொடியை ஏற்றுவதை நிராகரித்தமை, சமீபத்தில் தெற்கில் இடம்பெற்ற சம்பவம், நாட்டின் சமாதானம் மற்றும் அமைதியை விரும்பும் பொதுமக்கள் அதனை நிராகரிப்பார்கள் என்றும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## குருநாகல் ரயில் நிலைய அபிவிருத்தி செயற்றிட்டங்கள் ஆரம்பம்!

கொழும்பு, நவ. 21



குருநாகல் ரயில் நிலையம் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் நேற்று ஆரம்பமாகின.

குருநாகல் ரயில் நிலையத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனுடன் சம்பந்தப்பட்ட பலசெயற்றிட்டங்கள் போக்குவரத்து விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் தலைமையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

புதிய மேடை கட்டிடத் தொகுதி மற்றும் இலகுவான பயணப்பாதை ஆகியன இதில் இடம்பெற்றிருக்கின்றன என ரயில்வேத் திணைக்களத்தின் மேலதிக முகாமையாளர் விஜய சமரசிங்ஹ தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்படுவதைத் தொடர்ந்து குருநாகல் ரயில் நிலையத்தில் நிலவிய குறைபாடுகள் பெருமளவில் தீர்க்கப்பட்டுவிடும்.

அத்துடன் பல ரயில்கள் ஒரே முறையில் ரயில் நிலையத்திற்கு பிரவேசிக்கக்கூடிய வசதிகள் ஏற்படும். பயணிகளுக்கும் பல நன் மைகள் கிடைக்க இருக்கின்றன என்று ரயில்வேத் திணைக்களத்தின் மேலதிக முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

## பிற்பகல் வேளையில் இடியுடன் கூடிய மழை!

கொழும்பு, நவ. 21



நாட்டில் பிற்பகல் வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியம் காணப்படுகிறது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெரும்பாலான பிரதேசங்களில் பிற்பகல் 2 மணியின் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

வடக்கு , கிழக்கு மற்றும் மேல் மாகாணங்களின் கடற்கரையோரங்களில் சில பகுதிகளில் காலை வேளையில் மழை பெய்யும்.

சில பகுதிகளில் குறிப்பாக சப்ரகமுவ மாகாணம் மற்றும் களுத்துறை, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் சுமார் 75 தொடக்கம் 100 மில்லிமீற்றர் மழை பெய்யக்கூடும்.

மேற்கு சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களின் சில இடங்களில் காலைவேளையில் பனிமூட்டமான காலநிலை காணப்படக்கூடும்.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலமான காற்று வீசக்கூடும். இடிமின்னலிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பாக இருக்குமாறு திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

## தர்காநகர் வன்முறையை அன்று குற்றஞ்சாட்டியது போல இன்று எமக்கு ஜிந்தோட்டையை கூறலாம்: சந்திரசேன எம்.பி.!

அரசின் ஆட்சியைப் பிடிப் பதற்கு அளுத்கம தர்காநகர் சம்பவத்தை ஐக்கிய தேசியக் கட்சி பயன்படுத்தியது போல ஜிந்தோட்டை சம்பவத்தையும் எமக்குக் குறிப்பிடலாம்.

ஆனால், நாம் அவ்வாறு செய்யப் போவதில்லை என அனுராதபுர மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் ஜிந்தோட்டை சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது அரச காலத்தில் சிங்கள - முஸ்லிம் மோதல் இடம்பெற்றதாக குற்றஞ்சாட்டினர். ஆனால், இன்றும் அது இடம்பெறுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு சிங்கள, முஸ்லிம், தமிழ் மக்களிடையே பிரச்சினையை ஏற்படுத்தி அதி காரத்தைப் பெற வேண்டும் என்ற தேவை கிடையாது.



அப்படியான நடவடிக்கைகளை நாம் அனுமதிப்பதும் இல்லை. ஆனால், ஐ.தே.க. இன்று இதனைச் செய்கின்றது. அன்று ஐக்கிய தேசியக் கட்சி மஹிந்த ராஜபக்ஷவின் மீது குற்றஞ்சுமத்தியது போன்று இன்று எமக்கும் குற்றஞ்சுமத்த முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பெரும் புனரமைப்புப் பணிகளின் பின்னர் பாசனத்துக்காக இரணைமடுக்குளம் திறப்பு










கிளிநொச்சி, நவ.21

இரணைமடுக் குளத்தில் கடந்த இரண்டு வருட காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த பாரிய புனரமைப்புப் பணிகள் நிறைவடையவுள்ள நிலையில், காலபோகச் செய்கைக்காக இரணைமடுக் குளம் நேற்றுத் திங்கட்கிழமை திறந்து விடப்பட்டுள்ளது.


இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்திலும், வட்டக்கச்சி ஒற்றைக்கைப் பிள்ளையார் ஆலயத்திலும் விசேட வழிபாடுகள் இடம்பெற்ற பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், 'தமிழ்தேசியப் பசுமை' இயக்கத்தின் தலைவரும் முன்னாள் விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் ஆகியோர் இடதுகரை வாய்க்காலினதும் வலதுகரை வாய்க்காலினதும் துருசுகளைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்துள்ளனர்.

வடக்கின் மிகப்பெரும் குளமான இரணைமடுக் குளத்தின் கீழ் ஏறத்தாழ 21ஆயிரத்து 985 ஏக்கர் பரப்பளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. எனினும், கோடை காலத்தில் குளத்தில் தேக்கப்படுகின்ற நீரின் அளவு குறைவாக இருப்பதால், சிறுபோகத்தில் 8000 ஏக்கர் அளவுக்கு மட்டுமே நீர்ப்பாசனம் செய்யக் கூடியதாக இருந்துவந்துள்ளது. மேலும், குளத்தின் அணைக்கட்டுகளும், வாய்க்கால்களும் மிக நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாதமையால் வினைத்திறனுடன் நீர்ப்பாசனத்தை முன்னெடுக்கவும் இயலவில்லை.

இவற்றைக் கருத்திற் கொண்டு குளத்தின் நீர்க் கொள்ளளவை 34 அடியிலிருந்து 36 அடிக்கு உயர்த்தி அதிகளவு நீரைச் சேகரிக்கும் பொருட்டுக் குளப்புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றுதற்போது நிறைவடையும்நிலையில் உள்ளது. இதன் மூலம் சிறுபோகத்தில் செய்கை பண்ணப்படும் பரப்பளவு 12 ஆயிரம் ஏக்கர்களாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்புனரமைப்புப் பணிகளுக்கென ஆசிய அபிவிருத்தி வங்கி இருநூறு கோடி ரூபாவை வழங்கியிருந்தது. மேலும், வாய்க்கால்களும், விவசாய வீதிகளும் புனரமைக்கப்பட்டு பணிகள் நிறைவடைந்துள்ளன. இதற்குவிவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் 32 கோடி ரூபாவை வழங்கியிருந்தது.

புனரமைப்புப் பணிகள் முன்னெடுக் கப்பட்டதாலும் இந்த ஆண்டு மழைவீழ்ச்சி குறைவாக இருந்தமையாலும் குளத்தில் தற்போது 19 அடியே நீர் காணப்படுகிறது. இந்நிலையில், காலபோகத்துக்கான நீரை வழங்குமாறு கமக்கார அமைப்புகள் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில், புனரமைப்புப் பணிகள் நிறைவடையவுள்ள நிலையில் முதற் தடவையாகக் குளம் திறந்து விடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் வடமாகாணசபை உறுப்பினர்கள் த.குருகுலராசா, சு.பசுபதிப்பிள்ளை, மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி வே.பிறேமகுமார், பிரதி நீர்ப்பாசனப்பணிப்பாளர் எந்திரி ந.சுதாகரன், இரணைமடுக் கமக்கார அமைப்புகளின் சம்மேளனத்தின் செயலாளர் மு.சிவமோகன், முன்னாள் தலைவர் செ.சிவப்பிரகாசம் ஆகியோருடன் கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டிருந்தார்கள். (உ)




# தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளில் இழுத்தடிப்பு

## சாள்ஸ் எம்.பி. சபையில் குற்றச்சாட்டு



கொழும்பு, நவ.21

அரசியல் கைதிகளின் வழக்குகளை விசாரணை செய்வதற்கு அமைக்கப்பட்ட விசேட நீதிமன்றத்தின் ஊடாக அரசியல் கைதிகளின் வழக்குகள் இழுத்தடிக்கப்படுகின்றன எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் குற்றம் சுமத்தியுள்ளார்.

வரவு – செலவுத் திட்டம் மீதான குழு நிலை விவாதத்தின் மூன்றாம் நாள் விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்று வருகின்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

விசேட நீதிமன்றத்தில் போதைப்பொருள் தொடர்பான வழக்குகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றன. அரசியல் கைதிகளின்வழக்குகளைத் துரிதப்படுத்தி அவர்களை விடுதலை செய்யவேண்டும்.

அத்துடன் பயங்கரவாத தடைச் சட்டத்தையும் அரசு நீக்க வேண்டும் – என்றார்.

# மரண அறிவித்தல்



## முருகையா பரமேஸ்வரி

யாழ். ஏழாலையைப் பிறப்பிடமாகவும், கே.கே.எஸ். வீதி கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகையா பரமேஸ்வரி அவர்கள் நேற்று (20.11.2017) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வீரவாகு சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வீரவாகு முருகையாவின் அன்பு மனைவியும், நி.கலாதேவி, வ.ராதாதேவி, மு.யசோதரன் (B.Sc QS - ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ச.நிமலன் (பிரதி அதிபர், யாழ். இந்துக் கல்லூரி), க.வரதராஜா (டுபாய்), ய.தர்சினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், நி.ஜனலக்ஷன் (B.Sc Eng SANKAN), நி.பிருந்தாபன் (யாழ். இந்துக் கல்லூரி க.பொ.த. உயர்தரம் – 2018) வ.ஷஜித்திரா (இராமநாதன் நுண்கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்), வ.கோபிலக்ஷன் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), ய.றொஷாந் (ஆஸ்திரேலியா), ய.நிதுரா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, பூரணம், குமாரசாமி மற்றும் பூமணி செல்லத்துரை, காலஞ்சென்ற ஈஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (22.11.2017) புதன்கிழமை பி.ப.2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல்
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.11.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.